# பூங்கனி

THE POONKANI

பூங்கனி

கனி 06 சிறுவர் மாத இதழ் செப்டம்பர் 2005

ரூ.20



வ/இறம்பைக்குளம்
மகளிர் ம.வி
உலகிற்கு ஒளியாக



யதுநந்தினி

மூன்று வயதில் முகிழ்த்த முத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Reebok City

◆ சகலருக்கும் தேவையான சகலவிதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ள.....



◆ அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்.....

◆ சகலவிதமான கடிகாரங்கள்....



◆ Bag வகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள.....



## Reebok City

**இல. 87, கண்டிவீதி, வவுனியா.**

உரிமையாளர் : K. கிருஷ்ணாநந்தன்


வாணி கணனிப் பதிப்பகம். வவுனியா. 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளின் தேசியப் பறவைகள்

இலங்கை - காட்டுக்கோழி

இந்தியா - ஆண் மயில்

கனடா - வாத்து

அமெரிக்கா - கழுகு

ஜேர்மனி - வெள்ளைக் கொக்கு

வட அமெரிக்கா - வான்கோழி

பர்மா - பெண் மயில்

கொலம்பியா - பருந்து

அவுஸ்ரேலியா - சவாலோ பறவை

தென் ஆபிரிக்கா - நீலக் கொக்கு

டென்மார்க் - வானம்பாடி

தே.தேலக்ஷன்
தரம் - 10
கனகராயன்குளம் ம.வி

M. SIVAPATHASUNDARAM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெக்சிகோ வளைகுடா உலகின் மிகப்பெரிய வளைகுடாவாகும்.

பூங்கனி
சிறுவர் மாத இதழ்
A Monthly magazine for children

கனி - 06 செப்டம்பர் - 2005

## வாசகர்கள் எம்மோடு...

### ஆசிரியர் பார்வையில்

வணக்கம் வாசகர்களே!

ஒரு விடுமுறைச் சிறப்பிதழுக்குப் பின் மீண்டும் வழமைக்குத் திரும்பியிருக்கிறது பூங்கனி! ஆகஸ்ட்மாத இதழுக்கு நீங்கள் தந்த வரவேற்பு அபாரமானது. நன்றி வாசகர்களே!

எமது வளர்ச்சியில், எம்மை விடவும் அக்கறை கொண்டுள்ள பல வாசகர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிலிருந்து வே.பிரதீபன், வவுனியா வாரிக்குட்டியூரிலிருந்து என்.தமயந்தி ஆகிய வாசகர்கள் மிக நீண்ட கடிதங்களை எமக்கு அனுப்பிவைத்துள்ளனர். இதில், எமது வளர்ச்சிக்குச் சாத்தியப்பாடான பல திட்டங்களை அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள்! அவர்களுக்கு எமது நன்றிகள்! வாசகர்களின் விருப்பங்களை நிறைவேற்ற என்றுமே பின்நிற்காது பூங்கனி!

எமது .வாசகர்களில் ஒருவராகிய எஸ்.கெளரீஷன், இம்மாதத்திலிருந்து பூங்கனிக் குடும்பத்தில் ஒருவராகிறார். அவர் ஒரு மிகச்சிறந்த ஓவியர்! பூங்கனியின் வாசகராக இருந்து அவர் அனுப்பிவைத்த ஓவியங்கள், இதர ஆக்கங்கள் வாசகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றதனால், கெளரீஷனை எம்மோடு இணைத்திருக்கிறோம். இனி அவரது கைவண்ணங்கள் உங்கள் ரசனைக்கு விருந்தாகும்.

விடுமுறை ஸ்பெஷலில் நாம் வழங்கிய போட்டிகள், புதிர்கள், வேடிக்கைகள் போன்றவற்றைத் தொடர்ந்தும் வெளியிடுமாறு பல வாசகர்கள் கேட்டிருக்கிறார்கள்! நீங்கள் சொன்னால் மறுக்க முடியுமா எம்மால்?

நல்லது வாசகர்களே, மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கலாம்.

நன்றி.

- அன்புடன் ஆசிரியர்

ஆசிரியர்
கே.ஆர்.றஜீவன்

கணினி வடிவமைப்பாளர்
கே.திலீபன்

முகாமையாளர்
ஏ.ஆர்.இராஜேஸ்வரன்

ஓவியர்
எஸ்.கெளரீஷன்


இச்சஞ்சிகை இல. 141, திருநாவற்குளம், வவுனியாவில் அமைந்துள்ள காற்று பப்ளிகேஷனுக்காக இல. 61-B, முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள வாணி கணினி பதிப்பகத்தில் 2005 செப்டம்பர் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப் படுகிறது.

**வாசித்தலினூடே வாழ்வைக் காண்போம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில் உலகைச் சுற்றிவந்தவர் - மெஹலன்.

# கொடிது தம்பி கொடிது




தீண்டாமை கொடிது தம்பி!
நல்ல நூல்களை நாளும்
தீண்டாமை கொடிது தம்பி!

வேண்டாமை கொடிது தம்பி!
சான்றோர் நட்பு தன்னை
வேண்டாமை கொடிது தம்பி!

இல்லாமை கொடிது தம்பி!
உயர்லட்சியம் ஒன்றேனும்
இல்லாமை கொடிது தம்பி!

கொல்லாமை கொடிது தம்பி!
பொல்லாத சோம்பலை
இன்றேனும்
கொல்லாமை கொடிது தம்பி!

தள்ளாமை கொடிது தம்பி!
தீய பழக்கங்களைச் "சீ" எனத்
தள்ளாமை கொடிது தம்பி!

கல்லாமை கொடிது தம்பி!
தாய்த்திரு நாட்டைக் கைதொழக்
கல்லாமை கொடிது தம்பி!

சு.கௌசிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரங்க விளையாட்டின் தாயகம் இந்தியா

# வன்னியின்

## கயிலை வன்னியனார் 5

கதை சொல்பவர் ஸ்ரீ கலைமணி



17ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த வன்னியர்களுள் கயிலை வன்னியனே அதிக பிரபல்யம் வாய்ந்தவனாக விளங்கினான். அவன் அதிகாரத்தின் கீழிருந்த பனங்காமம் பற்று அடங்காப் பற்றிலே ஏறக்குறைய அரை வாசிப் பகுதியை உள்ளடக்கியிருந்தது. இம்மன்னன் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் பெரும் சவாலாகவே திகழ்ந்தான்.

ஐரோப்பியரின் மேலாதிக்கத்துக்குக் கட்டுப்படாது சுதந்திரமான அரசனொருவனின் ஆதிக்கத்தோடு ஆட்சிபுரிந்தான். அவனை ஒரு வன்னிப் பற்றுக்குத் தலைவன் என்பதற்கு மேலாக அரசன் என்றே ஐரோப்பிய அதிகாரிகளும் வரலாற்றாசிரியர்களும் வர்ணித்தார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்கத்தின் நியமனத்தின் மூலமாகவே வன்னியர்கள் தமது பதவிகளையும் ஆதிக்க உரிமைகளையும் பெற்றார்கள் எனக் கருதப்பட்டது. ஆனால் வன்னியர்கள் பரம்பரை வழியாக ஆட்சி செலுத்தும் முறை வன்னியரிடையே வழமையாகியது.

இதனால் வன்னியரது பலமானது வலுப்பெற்று வந்த போது அவ்வழமையை ஒல்லாந்த அதிகாரிகளினாலே மாற்றியமைத்துக்கொள்ள முடியவில்லை.

கி.பி 1660 தொடக்கம் கண்டியரசனின் கைதியாக இருந்த ஆங்கில மாலுமியான றொபேட் நொக்ஸ் தனது நூலில் கயிலாய வன்னியனின் ஆட்சி எல்லைகள் அடங்காப்பற்று மட்டுமின்றி கொட்டியாரப்பற்று வன்னிமை, பழுகாம வன்னிமை, பாணமை வன்னிமை முதலான பிரதேசங்கள் வரை பரந்திருந்தது என்பதனைப் புவியியல் படமூலம் குறித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்கா இருண்ட கண்டம் என அழைக்கப்படுகிறது.

காட்டியுள்ளார். இப்பிரதேசத்தினை கயிலாய வன்னி (Coylot Wannea) என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளார். கி.பி 1700 இல் ஈழத்திற்கு வந்திருந்த கிறிதோபர் சுவைட்சர் என்பவர் **வன்னிநாடு சுதந்திர அரசினைக் கொண்டிருந்தது** என்று குறிப்பிட்டுள்ளார்.

கயிலை வன்னியனாரின் முழுப் பெயர் கயிலைப் பிள்ளை வன்னியனார் என்பதாகும். கயிலை வன்னியனாரின் மரபில் வந்தவரே பண்டார வன்னியனார் ஆவார். கயிலை வன்னியனார் யானை மீது ஏறி மந்திரி பிரதானிகள் புடைசூழ திக்விஜயத்தை மேற்கொண்டார். பனங்காம வன்னிமையின் வீதிகள் தோறும் தோரணங்கள், பூரண கும்பங்கள், அலங்கார வளைவுகள்

# கதை

அமைக்கப்பட்டிருந்தன. மக்கள் வீதியில் இருமருங்கிலும் நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மக்கள் குல, மத பேதமின்றி மன்னரை வரவேற்றனர்.

தங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாகக் கருதினர். விவசாயிகள், அந்தணர், வணிகர், கைவினைஞர், சலவைக கலைஞர், நாவிதர், கம்மாளர், பணிக்கர், சேணியர் முதலிய பல்வேறு குலமக்களும் அவரவர்க்குரிய தொழிலை மேற்கொள்வதற்கு ஏற்றவிதத்தில் தனது ஆட்சி நிலவுகிறதா என்பதைக் கண்டறிவதே அவரது திக்விஜயத்தின் நோக்கமாக இருந்தது.

திக்விஜயம் பூர்த்தியானதும் அரசர், மந்திரி பிரதானிகள், தளபதிகள், அந்தணர், புலவர் ஆகியோர் அடங்கிய சபையைக் கூட்டி ஆலோசனை செய்தார். தீபங்குடிப் புலவர், மன்னனை வாழ்த்திப்பாடினார். வரி அறவிடுவதற்குப் பொறுப்பான பண்டாரப் பிள்ளைகள் மக்களின் விளை நிலங்கள் சரியான முறையில் அளவிடுவதிலுள்ள சிரமங்களை





பூமியதிர்வை அளக்கும் அலகு றிச்டர் அலகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கினார்.

பனங்காம வன்னிமையின் பாகாப்புத் தொடர்பான விடயங்கள் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டன.

இதுவரை ஒல்லாந்தர் தம் மேலாண்மையை வலியுறுத்தத் தொடங்கவில்லை. இனிமேலும் அப்படி இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது எனவே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மன்னரின் ஆட்சிக்கு உதவியாக இருந்த அவரின் மாமனார் நல்ல மாப்பாணர் எடுத்துக் கூறினார். வன்னியின் எல்லைப் பிரதேசங்களில் காவல் அரண்கள் பலப்படுத் தப்படவேண்டும், ஒல்லாந்தரின் நடமாட்டத்தை அவதானித்து அவ்வப்போது தகவல்கள் பெறப்படவேண்டும் எனப் பிரதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

வணிகர்களின் வர்த்தக முயற்சிகளுக்கு ஒல்லாந்த நிர்வாகம் இடையூறாக இருப்பதாக அவர்கள் தெரிவித்த கருத்து ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வணிகரின் துயர் துடைக்கும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொளப்படவேண்டும் எனத் தளபதி வெற்றிக் கடம்பன் கூறினான். நல்லமாப்பாணரின் மகள் பாலிநாச்சியார் சோகமே உருவமாகக் காட்சியளித்தாள்.

(தொடரும்)



"அந்தகாலத்தில் ஒரு ரூபாய்க்கு எவ்வளவு பொருள் வாங்கலாம் இந்தக் காலத்தில் அப்படியா"

"அப்படீன்னா இந்தக்காலத்துக்கு ஏன் வந்தீங்க?"

அடுத்த இதழில் வன்னியின்கதையில் "பாலி நாச்சியாரின் காதல்" பற்றிய சுவாரசியமான விடயங்களைத் தருகிறார் முல்லைமணி. எதிர்பாருங்கள்.





பாக்குநீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் நவரத்தின சுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர் மாதம் நடந்தவை

- **01.09.1956** ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் (LIC) ஆரம்பம்.
- **02.09.1987** வீடியோ சீடி (VCD) பிலிப்ஸ் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- **03.09.1969** புரட்சிவீரர் ஹோசிமின் மரணம்.
- **04.09.1985** அட்லாண்டிக் கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பல் தொலையுணர்வு கருவி மூலம் படம் பிடிக்கப்பட்டது.
- **05.09.1978** யமுனை ஆற்றில் வெள்ளப் பெருக்கு! ஆயிரக்கணக்கானோர் மரணம்!!
- **07.09.1950** ஹங்கேரியில் அனைத்து மதங்களும் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
- **09.09.1947** கலாயோகி ஆனந்த குமாரசாமி மரணம்.
- **10.09.1281** காசோலை (Cheque) எழுதும் முறை ஆரம்பம்.
- **12.09.1921** பாரதியாரின் இறுதிச் சடங்குகள் நடந்தன. 12 பேர் வரையில் கலந்துகொண்டனர்.
- **14.09.1981** அதிவேக தொடரூந்து (Bellet Train) பாரிசில் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- **15.09.1928** அலெக்ஸாண்டர் பிளையிங் பென்சிலினை அறிமுகப்படுத்தினார்.
- **16.09.1975** பப்புவாநியூகினியா நாடு சுதந்திரமடைந்தது.
- **18.09.1851** நியூயோர்க் டைம்ஸ் (Newyork Times) பத்திரிகை ஆரம்பமானது.
- **25.09.1897** பெற்றோலில் இயங்கும் மோட்டார் பஸ் லண்டனில் அறிமுகம்.
- **26.09.1954** கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை காலமானார்.
- **27.09.1989** இந்தியா "பிரிதிவி" ஏவுகணையை விண்ணில் ஏவியது.
- **29.09.1929** லண்டனில் போலீஸ்படை அறிமுகம்.
- **30.09.1947** ஐ.நா.சபையில் பாகிஸ்தான் இணைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
முதன் முதலில் தேசப்படத்தை வரைந்தவர் தொலாமி.

# ஒளிந்திருக்கும் பழமொழி

| | | |
|---|---|---|
| டி | னை | ம் |
| ம் | அ | க் |
| க் | ச | று |
| கு | ஆ | கு |



"குளத்திலே விழுந்த என்னை நீங்கதானே காப்பாத்தினீங்க"

"ஆமாம், அதுக்கு என்ன?"

"என் சேட்டுப் பையில் ஐம்பது ரூபா வைத்திருந்தேன், அது எங்கே சார்?"

## கவிதையே தெரியுமா?

# அன்புள்ள ஆசான்

அன்புள்ள ஆசானிடம்
ஆசையாய்ப் படித்திட
சுணக்கம் எதுவும் இல்லாமல்
வணக்கம் கூறி அமருவோம்
(அன்புள்ள.....)

ஆவலுடன் நாங்களும்
அக்கறையாய் படித்திட
அறிவுரைகள் பலவுடன்
தெளிவுடனே போதிப்பார்
(அன்புள்ள.....)

அன்புள்ள ஆசானின்
ஆசிகளைப்பெற்று
அனைவரையும் பேணி நாம்
அறவழியில் வாழுவோம்
(அன்புள்ள.....)

நல்ல பிரஜையாகவே
நாங்கள் நாளை விளங்கிட
நாளும் உழைக்கும் ஆசானை
ஆண்டவன் அருளால்
போற்றிடுவோம்
(அன்புள்ள.....)

சிஷ்யை





வேர் இல்லாத தாவரம் இலுப்பை மரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியை நோக்கி




## "திட்டமிடல் (Planning)"

மனிதன் இன்று முன்னேற்றத்தின் உச்சியில் நிற்கின்றான். எல்லாவகைகளிலும் மனிதனின் வெற்றிகள் அடையப்பட்டு வருகின்றன! திட்டமிடல்கள் மூலம் இதனை இலகுவாக அடைந்து வருகிறான். உங்கள் வாழ்க்கையிலும் திட்டமிடல்கள் அவசியம்! அதிகாலையில் எழுதல்! பொழுது புலரும்முன் அன்றைய வாழ்வுக்கு தயாராகிவிடுதல் அவசியம்! மிகப்பெரிய பதவிகளில், தலைமைகளில் இருப்பவர்கள் எல்லோரும் அதிகாலை 3 மணிக்கே தமது அன்றைய வாழ்க்கைக்கு தயாராகி விடுவார்கள்.



கூட்டங்கள், மக்கள் சந்திப்புகள் என அதிகாலையிலேயே பரபரப்பாக வாழ்வைத் தொடங்கிவிடுவார்கள்! சில முக்கியமான முடிவுகள் அதிகாலை வேளையில் எடுப்பதே சிறந்தது. நல்ல முடிவுகளை இதன்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கிராமங்களில் முதியவர்களின் வாழ்க்கைமுறை எமக்கு நல்ல உதாரணமாக அமைதல் வேண்டும். இவர்கள் அதிகாலையிலேயே காலைக் கடன்களை முடித்து இறைவனைத் தொழுது அன்றைய கடமைகளை ஆரம்பித்து விடுகின்றனர். இவர்களது ஆரோக்கியம் ஆயுள் நீடிப்பு என்பன அதிகாலையில் எழுவதால் சாத்தியமாகின்றன!

திட்டமிடல் கல்வி, தொழில், உணவு பழக்கவழக்கம் என்பன எல்லாவற்றிலும் அவசியம்! அடுத்த வருட வாழ்க்கையை இந்த வருடம் திட்டமிடுங்கள்! சிலர் தமது 10வருட வாழ்க்கையைத் திட்டமிட்டு வாழ்வார்கள்!

மனிதன் ஒவ்வொரு நாளும் திட்டமிடல் வேண்டும். எமது கண்முன்னால் பல உதாரணங்களை நாம் அன்றாடம் காண முடியும். அதுமட்டுமல்ல சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகள் தமது திட்டமிடலால் இன்று பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன. நீங்களும் வாழ்வைத் திட்டமிடுங்கள்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு - காளைச்சண்டை.

# வ/இறம்பைக்குளம்

# மாதம் ஒரு பாடசாலை

## உலகிற்கு ஒளியாக...

*115* வருடங்களுக்கு முன்பு - *1890*ம் ஆண்டு காலப்பகுதி வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்க சிறார்கள் கல்வி கற்பதற்காக பாடசாலை ஒன்று ஆரம்பமானது! ஒரு சிறிய ஓலைக்கொட்டிலில் ஆரம்பமான அப்பாடசாலைதான் இன்று அனைவரையும் வியந்து பார்க்க வைக்கும் வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்!

மாதம் ஒரு பாடசாலைக்காக தகவல்கள் திரட்ட நாம் செல்ல, முகாமைத்துவ உதவியாளர் திருமதி. பத்மாவதி ஜெயச்சந்திரன், நடன ஆசிரியை திருமதி. சூரியகலா அமரநாதன் ஆகியோர் சகிதம், பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி. ஜெயநாயகி செபமாலை அவர்கள் எமக்குத் தேவையான தகவல்களை வழங்கினார்.

வவுனியாவின் புறநகர்ப் பகுதியான இறம்பைக்குளத்தில் கம்பீரமாய்க் காட்சிதருகிறது வ/இறம்பைக்குளம்.ம.ம.வி "கொன்வன்ற்" என்று அனைவராலும் அழைக்கப்படும் இப்பாடசாலையின் ஆரம்பகாலத்திற்கு சென்று வருவோமா?

*1890*ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தக்கொட்டில் பாடசாலை பின்பு படிப்படியாக வளர்கிறது. *1937*ல் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டு 50 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட மண்டபம் ஒன்று அமைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நாட்டு வரைபடத்தை தேசியக் கொடியில் கொண்டுள்ள நாடு சைப்ரஸ்

# மகளிர் மகா வித்தியாலயம்

முதலாவது தலைமையதியாரியாக திரு.சி.மனுவேற்பிள்ளை நியமிக் கப்படுகிறார்.

ஆரம்பத்தில் 5ம் ஆண்டு வரை ஓர் ஆரம்பப் பாடசாலையாக இயங்கி, பின் 1948ல் கனிஷ்ட பாடசாலையாக தரம் உயர்த்தப் பட்டு 1957ல் சிரேஷ்ட பாடசாலையாக தரம் உயரும்போது, அரசாங்கப் பாடசாலையாக சுவீகரிக்கப்பட்டது.

பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளும், போட்டியில் ஈட்டிய வெற்றிகளும் 1970ல் இதனை மகாவித்தியாலமாக உயர்த்தின!

பின்பு படிப்படியாக பாடசாலை வளர்ச்சியடைகிறது கல்வி, விளையாட்டு, இதர துறைகள் பலவற்றில் வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி மாணவிகள் திறமை காட்ட, பாடசாலையின் புகழ் நாடு முழுவதும் பரவியது! கடந்த வருடம் ஓய்வு பெற்றுச்சென்ற அதிபர் அருட்சகோதரி மடுத்தீன் காலத்தில் இப்பாடசாலை மாணவிகள் விளையாட்டுத்துறை, கல்வித்துறை போன்றவற்றில் சிறந்து விளங்கினர்!

2004-02-25ல் புதிய அதிபராக அருட்சகோதரி ஜெயநாகி செபமாலை அவர்கள் பொறுப்பேற்றபின்பு பாடசாலையின் பௌதீக வளங்கள் பெருமளவிற்கு விருத்தி செய்யப்பட்டு வருகின்றன! அத்துடன் சிலகாலமாக இயங்காதிருந்த பழைய மாணவிகள் சங்கமும் தற்போது மீள இயங்க ஆரம்பித்திருக்கிறது.

''கொன்வன்ற்''ரின் சாதனைப்பட்டியல் நீளமானது



கடந்த வருடம் (2004) க.பொ.த.(சா/த) பரீட்சையில் 7 மாணவிகள் பத்து ப்பாடங்ளிலும் "A" சித்தியைப் பெற் றிருக் கிறார்கள். அத்துடன் 2004ல் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சையில் வவுனியா மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் (53 பேர்) இப்பாட சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரிடமிருந்து.....

எமது பாடசாலை ஒரு தேசிய பாடசாலை. இங்கே கல்வி பயிலும் மாணவிகள் பரீட்சைப் பெறுபேறுகளிலும், விளையாட்டுத் துறையிலும் சாதனை படைத்து பாடசாலைக்குப் பெருமை சேர்க்கின்றனர். க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவிகளின் விகிதாசாரம் அதிகரித்துச் செல்கிறது. எமது பாடசாலையின் பழையமாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இரு கண்களாகச் செயற்படுவதாலும் எமது ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களினதும் அயராத முயற்சியினால் பாடசாலை சிறந்து நிற்கிறது. எதிர்காலத்தில் நிறைந்த பௌதீக வளங்களுடன் சிறந்த ஒரு பாடசாலையாக வளரும்! எமது பாடசாலையில் தமிழ்மொழி மூலக்கற்கை மட்டுமன்றி ஆங்கில மொழி மூலக்கற்றலும் இடம் பெறுகின்றன மாறி வரும் உலகிற்கேற்ப மாணவிகளைத் தயார் செய்ய பாடசாலையின் கணினிக் கற்கை நிலையம் உதவி புரிகின்றது. நவீன யுகத்திற்கேற்ப மனித வளத்தை எமது கல்லூரி எதிர்காலத்தில் உருவாக்கி வவுனியா மாவட்டத்தில் முதல் நிலைப் பாடசாலையாகத் திகழ்வதுடன் கல்விக்கான சம வாய்ப்பினை வழங்கவும் திட சங்கற்பம் பூண்டு நிற்கின்றோம்.

---உண்மையே ஒளியாக---

யிலிருந்து சித்தியடை ந்திருக்கிறார்கள். விளையாட்டுத் துறையில் P.T.Scortல் அகில இலங்கை ரீதியாக கடந்த சில வருடங்களாக 2ம் இடத்தைத் தொடர்ந்து பெற்று வருகிறது இப்பாடசாலை.

V.G.M.V
உலகுக்கு ஒளியாக BE LIGHT TO THE WORLD

## விதையே தெரியுமா? விரைந்தெழு!

கடந்தவை அனைத்தும்
கனவென்று ஒதுக்கிவிடு!
கனவிலிருந்து நிஜத்தினை
ஏகப்படுத்தி அறிந்திடு!
துன்பங்களும் தோல்விகளும்
வெற்றிக்கே என புரிந்துவிடு!
நாளையது உன் உலகம்
சாதனைகளை சரித்திரமாக்கும்!

சி.கலாவேணி
உடையார்கட்டு தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில அகராதியைத் தொகுத்தவர் - சாமுவேல் ஜோன்சன்



இவை போன்ற இவர்களது பல சாதனைகளுக்கு, அதிபரின் அறையிலே நிறைந்திருக்கும் கேடயங்களும் வெற்றிக் கிண்ணங்களுமே தக்கசான்று.



(அவை எல்லாவற்றையும் புகைப்படம் எடுத்து முடிக்க நமது புகைப்படப்பிடிப்பாளர் பட்ட பாடு இருக்கிறதே அது தனிக்கதை!)

''ஆசிகள்'' எனும் வருடாந்த சஞ்சிகையினையும், ''தீபம்'' எனும் சிறு சஞ்சிகையினையும் (தவணைக்கொருமுறை) தருகிறது வ/இறம்பைக்குளம் மகளிர் .ம.வி.

"ஈஸ்வரா என்னை நின் சப்தமாக்கு" என்று ஆரம்பமாகிறது பாடசாலையின் பிரார்த்தனைக் கீதம் "உலகிற்கு ஒளியாக" (Be light to the world) என்பது அவர்களது கட்டிய வாசகம்

இக்கட்டுரைக்காக தகவல்கள் பெற நாம் சென்றிருந்த வேளை அன்புடன் வரவேற்று நாம் கேட்ட தகவல்களை வழங்கிய அதிபர், முகாமைத்துவ உதவியாளர், ஆசிரியர்கள் போன்றோருக்கு எமது நன்றிகள்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்



"உலகிற்கு ஒளியாக" இருக்கும் என்பதில் எமக்கு எதுவித ஐயமுமில்லை.





இரும்புச்சத்து போன்றவை ... அதிகமாக காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிமறவாத படகோட்டி



ஒரு படகோட்டி காட்டு வழியில் நடந்து கொண்டிருந்தான். அக்காட்டில் மாமரம் ஒன்று இருந்தது. அவன் மாமரத்தில் இருக்கும் பழங்களைப் பறிக்க மாமரத்தின் உச்சியில் ஏறி தவறி கீழே விழுந்து விட்டான். அவ்வழியாக வந்த விறகு வெட்டி உடனே கீழே விழுந்த படகோட்டிக்கு காட்டில் உள்ள மூலிகைகளைக்கொண்டு வைத்தியம் செய்து அவனைக் காப்பாற்றினான். விறகு வெட்டிக்கு "மிக்க நன்றி" என்று சொல்லி விட்டுச் சென்றான் படகோட்டி.

இன்னுமொருநாள் படகோட்டி ஓர் ஆற்றில் பயணம் செய்து கொண்டிருந்தான். அதே ஆற்றில் விறகு வெட்டியும் வேறொரு படகில் பயணம் செய்து கொண்டிருந்தான். விறகு வெட்டி பயணம் செய்த படகு கவிழ்ந்து தாழ்ந்து விட்டது. உடனே படகோட்டி ஆற்றில் குதித்து விறகு வெட்டியைக் காப்பாற்றினான் விறகு வெட்டி படகோட்டிக்கு "நன்றி" என்று கூறிக்கொண்டு இருவரும் கட்டித்தழுவினர். இருவரும் நண்பர்களானார்கள்.

**கு.ஓவியா,** தரம் 8A
வ/இறம்பைக்குளம்.மகளிர்.ம.வி

# குட்டிக்கதை குட்டிக்கதை குட்

## திருடர்களை ஓடவைத்த முல்லா!



ஒரு நாள் முல்லா எல்லோரிடமும் தம்முடைய வீரதீரச் செயல்களைக் கூறிப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தார் அப்போது முல்லா "ஒருமுறை நான் பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது பயங்கரமான திருடர்கள்கூட்டத்தினை ஓடும்படி செய்திருக்கிறேன்" என்று பெருமையாகக் கூற அப்போது அங்கிருந்த ஒருவர் முல்லாவிடம் "நீங்கள் ஒருவராக இருந்து கொண்டு எப்படி திருடர்களை ஓடும்படி செய்தீர்கள்?" எனக்கேட்க அதற்கு முல்லா அது மிகவும் சுலபமானது திருடர்களைக்கண்டதும் நான் ஓடினேன். அவர்கள் என்னைப் பிடிப்பதற்கதாக என் பின்னே ஓடி வந்தனர் என்றார்.

**அ.பிருந்தா,** தரம் 5E
வ/இறம்பைக்குளம்.மகளிர்.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலின் வேகத்தை அளவிடும் கருவி - அனிமோ மீற்றர்.

# அரைகுறை வைத்தியர்

எலகிரி என்னும் ஊரில் கோபி என்பவன் பசுமாடுகளை வைத்து பால்வியாபரம் செய்து வாழ்ந்து வந்தான். ஒருமுறை அவனுடைய பசுக்களில் ஒன்று நோய்வாய்ப்பட்டது. உடனே கோபி தன்னுடைய நண்பன் ரவியிடம் சென்று ஆலோசனை கேட்டான். ரவிக்கு மிருக வைத்தியம் அரைகுறையாகத் தெரியும். அவன் கோபியிடம், "நீ சொல்வதைப் பார்த்தால் பசு சரிவர தீவனம் உண்பதில்லை. கழுநீர் குடிப்பதில்லை போலத் தெரிகிறது. என்றவன் தொடர்ந்து, "ஒருதடவை எனது பசுவும் இவ்வாறு நோய்வாய்ப்பட்டது. நான் எனக்குத் தெரிந்த வைத்தியப்படி கழுநீரில் வேப்பிலையை அரைத்துக் கலக்கி, கடுக்காய் கொஞ்சமும், பாகற்காய் சாறும் கலந்து பசுவைக் குடிக்கச் செய்தேன்." என்றதும் "உன் வைத்தியம் எனக்குப் புரிந்தது" என்று கூறி கோபி சென்றுவிட்டான்.

இரண்டு நாட்களின் பின் கோபி பதட்டத்துடன் ரவியை அணுகி "நீ சொன்னமாதிரியே வைத்தியம் செய்தேன் என்பசு இறந்துவிட்டது" என்று கவலையோடு கூறினான். உடனே ரவியும் "எனது பசுவும் இறந்துவிட்டது இதைத்தான் அன்று சொல்ல நினைத்தேன் நான் கூறியபடி செய்யாமல் நல்ல வைத்தியரைப் பார் என்று நான் சொல்வதற்குள் நீ அவசரப்பட்டு கிளம்பிவிட்டாய்" என்று கூறினான். கோபி தன் செயலை எண்ணி வருந்தினான்.




**இ.சாமுவேல்,** தரம் 9B
வ/விபுலாநந்தாக் கல்லூரி.

# குட்டிக்கதை குட்டிக்கதை

## ஒற்றுமையே பலம்

ஒரு காட்டில் நான்கு எருதுகள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அவ்வாறு நான்கு பசுக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும்போது அவற்றைப் பிரிக்க ஏனைய மிருகங்கள் சதி செய்தன. ஆனால் அந்தப் பிரியாத எண்ணமுள்ள எருதுகளோ அவற்றை விரட்டி விட்டன அன்று ஒரு நாள் நான்கு எருதுகளும் நீர் குடிக்க குளக்கரைக்குச் சென்றன குடிக்கும் போது அவற்றை ஒரு சிங்கம் பார்த்தது அதன் நாவில் எச்சில் ஊறியது அந்த எருதுகளை சிங்கம் உண்ண ஆசைப்பட்டது அவற்றை அடித்து உண்பதற்கு அந்த எருதுகளை சிங்கம் துரத்தியது அந்த நான்கு எருதுகளும் சேர்ந்து சிங்கத்தை அடித்து காயப்படுத்தின சிங்கம் காயமுற்று ஒருமரத்தடியில் வீழ்ந்து கிடந்தது அத் தெருவால் ஒரு நரி வந்தது நரி தந்திரப்புத்தியில் பெயர் போனதல்லவா சிங்கம் நரியைக் கண்டது நரியை அழைத்து நீ அந்த நான்கு எருதுகளையும் பிரிக்க வேண்டுமென்றது அந்த நரி பல சூழ்ச்சிகளையும் செய்து நான்கு எருதுகளையும் பிரித்தது அதனால் சிங்கம் நான்கு எருதுகளும் பிரிந்தவுடன் ஒவ்வொன்றாக அடித்து உண்டது நான்கு எருதுகளும் பிறர் சொல்லைக் கேட்காமல் ஒற்றுமையாக இருந்திருந்தால் அவை இறந்திருக்கமாட்டாது எனவே ஒற்றுமையே பலம்.



**யோ.மேகலா** தரம் 10A
மு/உடையார்கட்டு ம.வி



கிரிஷாந்தி ... இங்கிலாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தே வருகிறேன்

ஒருவருக்கு நோய் முற்றிவிட்டது "இனிபிழைப்பது கஷ்டம்" என்று டாக்டரும் கூறி விட்டார். அந்த நோயாளிக்கு இரண்டு மகன்கள்! இருவரும் மகா கஞ்சர்கள். அவர்களில் மூத்தவன் அப்பாவின் காதில் விழாது என்று நினைத்துக்கொண்டு "தம்பி காரில் புதைக்க எடுத்துக்கொண்டு போனால் செலவு அதிகமாகும். குதிரை வண்டியே போதும்" என்றான். "குதிரை வண்டியானாலும் சுடுகாடு ஐந்து மையில் தூரம் இருக்கறதே அதிகப்பணம் கேற்பானே" என்றான் தம்பி. உடனே தந்தை மெதுவாக கண் விழித்து அவர்களிடம்,

சொன்னார் "அருமை மைந்தர்களே மூலையில் இருக்கும் என் பொல்லை எடுத்துத்தாருங்கள் நான் நடந்தே வந்து விடுகிறேன்"




ப.வைஷ்ணவன்
தரம் 5E
வ/இறம்பைக்குளம்.மகளிர்.ம.வி

# குடிக்காது குடிக்காது குடிக்

# உஷ்! சத்தம் போடாதே!

வைத்தியர் ஒருவர் பைத்தியக்கார வைத்தியசாலைக்கு சென்றபோது அங்கு ஒருவன் நிமிர்ந்து கிடந்து பாடிக் கொண்டிருந்தான். அப்போது வைத்தியருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அவர் தனது குழப்பத்தை தீர்ப்பதற்கு பாடிக் கொண்டிருந்தவனைக் கேட்டார் "நான் போகும் போது ஒருபுறமிருந்து பாடிக்கொண்டிருந்தாய் வரும்போது மறுபுறம் கிடந்து பாடிக்கொண்டிருக்கிறாயே என்ன உனக்கு நடந்தது?" அவன் அப்போது சொன்னான் "உஸ்! சத்தம் போடாதே ஒரு பக்க கெசற் பாடி முடிந்து விட்டது. மற்றய பக்க கெசற் பாடிக்கொண்டிருக்கிறது."



தி.வினோதினி
தரம் 10
வ/கனகராயன்குளம் ம.வி



மரகதத் தீவு என அழைக்கப்படும் நாடு - அயர்லாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானி சந்திப்பு




## சார்ள்ஸ் டார்வின்

*வாசகர்களே!*

*ஜூலைமாத பூங்கனியில் விஞ்ஞானி டார்வின் தன்னைப்பற்றியும், தனது பரிணாமக் கொள்கை பற்றியும் எமது நிருபர் ஒவியாவுடன் கலந்துரையாடினார். அந்த சுவாரசியமான பேட்டியின் நிறைவுப் பகுதி இவ்விதழில் இடம்பெறுகிறது.*

ஒவியா:- ஐயா யார் இவர்? இவரை எப்படி ஒரு முன்னுதாரனமாகக் காட்ட முடியும்? இவர் எந்த வகையில் இன்றய இளைய சமுதாயத் தினருக்கு ஒரு முன்னுதாரண புருஷராக விளங்க முடியும்?

டார்வின்:- ஆம் மகளே, உன் ஆச்சரியமான கேள்வி எனக்கு விளங்குகிறது. இம்முன் உதாரணம் இன்றய இளைய சமுதாயத்தினருக்கு மட்டுமல்ல, அவர்களை வழிநடத்துகின்ற ஆசிரியர், பெற்றோர் யாவருக்குமானது. ஆம் மகளே! அந்த முன்னுதாரணர் சாள்ஸ் ரொபர்ட் டார்வின் என்ற பரிணாமர் கோட்பாட்டுக்குச் சொந்தக்காரர்.



ஒவியா:- என்ன சொல்கி றீர்கள்....?

டார்வின்:- ஆம் மகளே இதெல்லாம் எனக்குக்கிடைத்த என்னைச் சுட்டிக்காட்டிய வார்த்தைகள்தான். இத்தகைய ஒருவராலும் உலகை வழிநடத்த முடியும் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவியா:- நன்றி ஐயா உங்கள் வழிகாட்டலை நாங்கள் ஏற்று நடப்போம். விடைபெறுகிறேன்.

தயாரிப்பு **க.ரணேஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபியின் புதிர்ப்போட்டி

**இலக்கம் 06**

போட்டி இல. 04இல் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" இப்பழமொழியைப் புதுமொழியாக எழுதுமாறு கேட்டோம் இல்லையா? "கொம்பியூட்டர் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" பாடசாலை இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்", "சினிமாத் தியேட்டர் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என ஏகப்பட்ட விடைகள் வந்து சேர்ந்தன...!

நமது திண்டாட்டத்திற்கு கேட்கவும் வேண்டுமா? பலத்த சிரமத்தின் மத்தியில் வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்தோம்.

மிக வித்தியாசமாக கற்பனை செய்து பதில் எழுதியவர்!

1

**கு. அஜிதா**
தரம் 11, வ/கனகராயன் குளம் ம.வி
கனகராயன்குளம்.

"தொலைத்தொடர்பு சாதனங்கள் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"

**மேலும் பொருத்தமான விடைகள் எழுதிப் பரிசு பெறுபவர்கள்**

2. **ஜெ.ஜெயதர்ஷினி,** தரம்-9, யா/சாவகச்சேரி, இந்துக்கல்லூரி.
3. **நா.மேனகா,** தரம்-9C, யா/மல்லாகம் ம.வி.
4. **வி.விகல்யா,** தரம்-11B, மு/கலைமகள் ம.வி, முள்ளியவளை.
5. **இ.தனபாலசிங்கம்,** 128ம் கட்டை, பரசங்குளம், புளியங்குளம்.
6. **ச.நிர்மலன்,** 9A, வ/விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா.
7. **ப.அனந்தன்,** தரம்-8, தி/விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை.
8. **கு.பகீரதன்,** 60, கலாசாலைவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
9. **சி.சிவஜனனி,** 9C, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா.
10. **ஆ.விஷ்ணுதாஸ்,** தரம்-06, வ/ஓமந்தை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிகார உற்பத்திக்குப் பெயர் போனநாடு - சுவிற்சர்லாந்து..

## இம்மாதக்கேள்வி

ஒருவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார், அப்போது தொலைபேசி மணி ஒலித்தது. உடனே அவர் எழுந்து சென்று குடையொன்றை எடுத்து வந்து அதனைப் பிடித்துக்கொண்டு சாப்பிடத்தொடங்கினார். அது ஏன்?

## விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**கோபியின்** புதிர்ப்போட்டி-03

**கோபி ஏஜென்சி**

**இல-33, மில் வீதி, வவுனியா.**

முடிவுத் திகதி 30-09-2005


வெளிநாட்டில் உங்கள் உறவுகள் அனுப்பும் பணத்தைப் ஒரிரு நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கோபி ஏஜென்சி** இல - 33, மில்வீதி, வவுனியா.

உலகெங்கிலுமிருந்தும் விரைவாகப் பணத்தைப் பெற ஒரே வழி

**WESTERN UNION** மணி டிரான்ஸ்ஃபர்

Western Union ன் அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

**கோபி ஏஜென்சி**
**இல-33, மில் வீதி,**
**வவுனியா.**

**10** இலக்கங்களுடன் நாடுங்கள்

T.P No : 024 - 2222411, 024 - 4589225, 024 - 2224351

2004ம் ஆண்டிலும் மிகச் சிறந்த முகவருக்கான விருதினையும் பெற்று வெற்றி நடைபோடுகிறது கோபி ஏஜென்சி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியக் குடும்பத்தில் எதிர்த்திசையில் சுற்றும் கோள் - யுரேனஸ்.




கே.ஆர்.ஆர்.

கனி - 5ல் - கடத்திக்கொண்டு வரப்படும் அருண் காட்டுக்குள் ஒரு அழகிய வீட்டில் தங்க வைக்கப் படுகிறான். இரவு நேரம். அருண் அங்கிருந்து தப்பிச்செல்ல முயன்றபோது கையில் கூரிய கத்தியுடன் அவனை மறிக்கிறாள் ஆர்த்தி!

இனி....

"அண்ணா நீங்க இங்கிருந்து தப்பிப்போக முடியாது! இந்தக்காட்டில் ஆபத்தான விலங்குகள் இருக்காம்! இரவு நேரம் ஆபத்து! பேசாம உங்க அறையில் ஓய்வு எடுத்துக்குங்க, காலைல நாம எல்லோரும் ரகசியப்புதையல தேடிப் போகப் போறம்!"

ஆர்த்தி சென்னது அருணுக்குச் சிறிது நம்பிக் கையை வரவழைத்தது.

"ஆர்த்தி என்னால எதையுமே நம்ப முடியேல, எல்லாமே மர்மமா இருக்கு, நீ உண்மையிலேயே என்னோட தங்கச்சியா?"

"ஆமா அண்ணா, நான் உங்களோட தங்கச்சிதான்! நாம் எப்படிப் பிரிஞ்சோம் என்பது தனிக்கதை"

"அப்போ அந்தப்பெரியவர்....?"

"அவர் உண்மையிலேயே நம்மோட தாத்தா தான், அவர் ரொம்ப நல்லவர், அவரைப் பத்திச் சொல்றத்துக்கு நிறைய இருக்கு"

"நீ சொல்லாத ஆர்த்தி, நேரம் வரும்போது நானே சொல்லிக்கிறேன்"

என்று கூறிய வாறு அங்கு வந்தார் அந்தப் பெரியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேடியக் கதிர்களைக் கண்டுபிடித்தவர் - மேரிகியூரி அம்மையார்.

"என்ன அண்ணனும் தங்கையும் இந்த நேரத்தில் இங்க என்ன பண்றீங்க?"

பெரியவர் புன்னகையோடு கேட்க,

"அ...அது வந்து தாத்தா, அண்ணா ஏதோ கெட்ட கனவு கண்டாராம் அதுதான் எங்கிட்ட சொல்லிக்கிட்டு இருக்கார்" ஆர்த்தி சமாளித்தாள்

"சரி சரி.... சீக்கிரம் போய்ப் படுங்க காலைல பயணம். ரகசியப் புதையல எடுத்து உரியவரிடம் ஒப்படைக்க வேண்டாமா?"

"யார் தாத்தா அந்த உரியவர்கள்?"

இருவரும் கேட்க,

"நீங்க ரெண்டுபேரும் தான்" சிரித்தவாறே கூறிய தாத்தா அங்கிருந்து சென்றார்.

★★★

பொழுது விடிந்தது!

அனைவரும் எழுந்து புறப்படத் த்யாரானார்கள். ஆர்த்தி, அருண், தாத்தா, இவர்களுடன் வேறு இருவருமாக மொத்தம் ஐந்து பேர் அந்த அழகிய வீட்டுக்கு முன் வந்து நின்றார்கள்.

தாத்தா சொன்னார்



"இப்போ நாம ஆரம்பிக்கிற இந்தப் பயணம் ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்தது, அத்



தோடு ஆபத்தும்கூட, ஆகவே நாம் எல்லோரும் ரொம்ப தைரியமா இருக்கணும், அருணோட பிறந்த நாளுக்கு முன் அந்த புதையலை எடுத்தாகணும், இல்லேன்னா அருணோட உயிருக்கு ஆபத்தாகும். "

"சரி தாத்தா ரகசியப் புதையலின் பெட்டகத்திறப்பு பாட்டிக்கிட்டதானே இருக்கு, அதை எப்படி வாங்குவது? " அருண் கேட்டான்.

தாத்தா சிரித்தார்

"அருண், நீ பொறுத்திருந்து பாரேன் பாட்டியே திறப்பைக் கொண்டு வந்து நம்மகிட்ட கொடுப்பா"

"என்ன தாத்தா சொல்லுறீங்க?"

"அருண் அந்த திறப்புத்தான் பாட்டியோட யமன். அது அவவுக்குத் தெரியாது, அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் கண்டுபிடித்த முதலாவது உலோகம் - செப்பு.

தெரிய வரும்போது அதை நம்ம கிட்ட கொடுத்திடுவா"

"எல்லாஞ் சரி தாத்தா, இப்போ பாட்டி உருவத்தில இருக்கிறது அந்த மந்திரவாதி தானே"

அருண் கேட்க அனைவரும் அதிர்ச்சியில் உறைந்தார்கள்.

"அருண் உனக்கு எப்படித் தெரியும்?"

தாத்தா அவசரமாகக் கேட்டார்.

"நேற்று இரவு நீங்க எங்கிட்ட பேசிட்டு போனதுக்குப் பின்பு, நான் தூங்கப் போனேன் அப்போ பாட்டி என்னோட அறைக்கு வந்தாங்க, என்னத் தன்னோட வரச் சொல்லி வற்புறுத்தினாங்க, நான் மாட்டேன்னு சென்னேன் அதனால கோபப்பட்ட பாட்டி திடீர்னு மந்திரவாதியா உருமாறினாங்க உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க!"

அருண் சொன்னதைக் கேட்டு அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

"அருண் நான் அப்பவே சொன்னேனில்லையா, உன்னோட பாட்டி எப்பவோ இறந்திட்டாங்க இப்போ அந்த மந்திரவாதிதான் பாட்டி உருவத்திலே இருக்கிறான் அவனைத் தோற்கடிச்சாத்தான் நாம புதையல எடுக்க முடியும் "

தாத்தா கூறியவாறே



**"பாரதியார் சொன்னபடி செய்ததற்காகவா உன்னை டீச்சர் அடிச்சாங்க"**

**"ஓடி விளையாடு பாப்பா"ன்னு பாரதியார் சொன்னதை வகுப்பறைக்குள்ளே நான் செய்தது தப்பாயிடிச்சு**

தனது கழுத்தில் அணிந்திருந்த ஒரு மாலையைக் கழற்றி அருணின் கழுத்தில் போட்டார்.

"அருண் பயப்படாதே இனிமே அந்த மந்திரவாதி உன்னை நெருங்க மாட்டான் சரி நாம இப்போ புறப்படலாம்" என்று தாத்தா கூற அனைவரும் புறப்பட்டனர்.

* * *

ரகசியப் புதையல் இருக்கும் மாவூர் கிராமத்துக் காட்டை நோக்கி அவர்களது பயணம் ஆரம்பமானது!

காடு என்றால் அது சாதாரன காடு அல்ல! கொடிய காட்டு விலங்குகள் அங்கே நடமாடித்திரிகின்றன! ஆபத்துக்கள் ஏராளம். அத்தனையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டும். எல்லோரையும் விட அருணுக்குத்தான் ஆபத்து ஆபத்துக்கள் அதிகம்! எந்தவொரு ஆபத்தையும் எதிர் நோக்குவதற்கு அவர்கள் தயாராக இருந்தாலும், மீளவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சல் அட்டையை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு - அவுஸ்திரேலியா.

முடியாத ஒரு பயங்கர ஆபத்தில் தாங்கள் சிக்கப் போவதை அவர்கள் அறியவே இல்லை! அந்த ஆபத்தைக் கடந்தால் தான். ரகசியப் புதையலை எடுக்க முடியும்! அதன் பின்புதான் மந்திர வாதியால் பாதாளச்சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அருண், ஆர்த்தியின் அம்மாவை மீட்க முடியும்!

ரகசியப் புதையலை எடுத்தால் தான் ஒரு கிராமத்தையே அழித்த மந்திரவாதியை தோற்கடிக்க முடியும். எல்லாமே வெற்றிகரமாக ரகசியப் புதையலை எடுப்பதிலேதான் தான் இருக்கிறது!

அடர்ந்த காட்டினூடாக அவர்கள் பயணித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் ஒன்பது நாட்களே இருக்கின்றன! தாத்தா முன்னே செல்ல ஏனைய நால்வரும் பின்னே சென்று கொண்டிருந்தார்கள் இறுதியாகச் சென்று கொண்டிருந்தான் அருண்!

சிறிது தூரம் போனதும் தாத்தா கேட்டார்.

"அருண் நீ அந்த மந்திரவாதியைப் பார்த்த போது அவனது வலது கையில் ஆறு விரல்கள் இருந்ததைக் கவனித்தாயா?"

அருணிடமிருந்து பதில் வரவில்லை!

சந்தேகத்தில் தாத்தா திரும்பிப்பார்த்தார்!

அருணைக் காணவில்லை!

- மர்மங்கள் தொடரும்

கவிதையே தெரியுமா?

# தாய்

எம் வாழ்வில்
ஒளிவீச உருகும் மெழுகாய்
உன்னை மாற்றிக் கொண்டாய்!
மற்றவர் முன் தன் மகன்
தலை குனியக் கூடாதென
சேலையை கந்தலாக்கிக் கொண்டாய்!
உன்னைப் பாலை வனமாக்கி
எனக்குச் சோலை வனம்
அமைத்துக் கொடுத்தாய்!
மீண்டும் மீண்டும் உன் வயிற்றில்
உதைத்தேன்
இருப்பினும் முகம் சுழிக்காமல்
தாங்கிக்கொண்டாயே
இது தான் தாய்மையோ?

சஜினித்தினி லோஜிதாஸ்,
பழைய வீதி,
கனகராயன்குளம்.



"பச்சைக் காய்கறிகளை உணவில் சேர்த்தா நல்லதுங்க"
"அப்ப ஏன் கரட்டையும் பீற்றூட்டையும் சாப்பிடுறாய்?"



இரவும் பகலும் சூரியன் தெரியும் நாடு - ஃபின்லாந்து.



# தயாவின் வாக்கியப் போட்டி 5

போட்டி இலக்கம் - 03இல் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும். பரிசுக்குரியவர்களாக 04பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

01. **வே.பிரதீபன்,** வித்தியாபுரம், ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு.
"காலை விடிவுதனை
காட்டிக் கொடுத்ததற்கு
கழுத்தினில் கைபட்டு
கொலைக்களம் போகிறதோ?"



02. **சி.ஜெயரூபன்,** மு/உடையார்கட்டு, ம.வி
"உரித்த கோழியும்
துடிக்கிறதோ-உம்
உயிரை எடுத்தால்-உமது
இதயம் துடிக்குமா?"

03. **ஐ.சுகிர்தன்,** இல. 84/88, லக்சபான வீதி, தோணிக்கல், வவுனியா.
"இன்று நீ என் கழுத்தைப் பிடிக்கிறாய்
நாளை என்னுள் இருக்கும் பறவைக் காய்ச்சல்
உன் கழுத்தைப் பிடிக்கப் போவதை அறியாமல்...."

முடிவுத் திகதி 30-09-2005

04. **த.ருஷாந்தன்,** 40, கண்டிவீதி, வவுனியா.
"மனிதா சேவல் கூவினால்
விடிந்தது என்கிறாய் - ஆனால்
சேவலுக்குத்தான்
இன்னும் விடிவேயில்லை"



அருகிலுள்ள படத்திற்குப் பொருத்தமான வாக்கியத்தை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி

**தயாவின் வாக்கியப்போட்டி இல-05,
பூங்கனி,
இல. 141, திருநாவற்குளம், வவுனியா.**

வெற்றிபெற்றோருக்கு பரிசுகள் பெறுவது தொடர்பாக கடிதம் மூலம் அறிவிக்கப்படும்.

தயா ஸ்ரோர்ஸ்

T.P: 024 - 2222386
077 - 3025436

அனைத்து வகையான
பயிற்சிப் புத்தகங்கள், கதைப்புத்தகங்கள் அன்பளிப்புப் பொருட்கள் சஞ்சிகைகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள

இல 06, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சிங்கராஜவனம் சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ளது.

# உங்கள் ஓவியங்கள்



க.கயல்விழி
தரம் 9
மு/வன்னிவிளாங்குளம்
அ.த.க. பாடசாலை



ச.மயூரிகா
வ/தவசியாகுளம்
அ.த.க. பாடசாலை



உங்களுக்கொரு புதினம் தெரியுமே?

நானும் முதல் உதவி எழுதுற
முதலுதவியோன் அண்ணையும்
கதிர்காமம் போய்வந்தனாங்கள்
சரியான களைப்பா இருக்கு.
அதால எங்கட ஆக்கங்கள
அடுத்தமுறை தாறம்.
கவலைப்படாதீங்க.



கங்கையும் யமுனையும் சந்திக்கும் இடம் - அஹமதாபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் சொன்னவை

பூங்கனி ஆசிரியருக்கு,
முதலில் நீங்கள் சிறுவர்களை அணுகும் முறை மிகவும் தரமானதாக இருக்கிறது. அதுவே பூங்கனியின் வெற்றிக்கு முதல் படியாகவும், உள்ளது. சகல ஆக்கங்களுமே தரத்திலும் தரம்!
மலர்க பூங்கனி!

**P.துஷாரா,** வாரிக்குட்டியூர் வவுனியா.

---

பூங்கனிக்கு வணக்கம்,
நீ தாங்கிவரும் அனைத்து ஆக்கங்களுமே மிகவும் தரமானவை. அதிலும் ரகசியப் புதையல், பூங்கனியின் தேடல் போன்றவற்றை மிகவும் விரும்பி வாசிப்பேன்! நீ மேன் மேலும் வளரவேண்டும்.

**இ.ஜெனிற்றா,** தரம் 10, வ/கனகராயன்குளம் ம.வி.

---

ஜீலைமாதப் பூங்கனி கலக்கலோ கலக்கல், பூங்கனியின் தேடல் சூப்பரோ சூப்பர். குறும்புக்குமரனின் அ முதல் ஃ தானடா அருமை.

**க.ரசிந்தா,** தரம் 11, கிளி/பூநகரி நல்லூர் ம.வி

---

*பூங்கனிக்கு வணக்கம்.*
*உனது முன்னேற்றப் பாதையில் நாமும் காலடிவைக்க உதவி செய்த உனது ஊழியர்களுக்கு எனது நன்றிகள்! உங்கள் பணிதொடர நல்வாழ்த்துக்கள்.*

**ப.கலாம்பிகை,** தரம் 11, வ/பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்.

---

அன்புடன் ஆசிரியருக்கு,
பூங்கனி எம்மை மிகவும் கவர்ந்துள்ளது. இப்போது எமது பாடசாலையில் மிகவும் பரபரப்பாகப் பூங்கனி பேசப்பட்டு வருகிறது. கணினி கண்ணா கணினி மிக அருமையாக இருக்கிறது!

**ரு.நவீனா, ஞா.தர்ஷினி,** தரம் 11, யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

---

நான் பூங்கனி சஞ்சிகைகளைத் தவறாது வாசித்து வருகிறேன்! என்மனதை மிகவும் கவர்ந்துள்ளது பூங்கனி.

**S.பிரமிலா,** A/L 2006 (கலை) வ/பெரிய கோமரசன் குளம் ம.வி.

---

அன்புடன் ஆசிரியருக்கு,
பூங்கனி மாத இதழ் சூப்பரோ சூப்பர், அதில் நான் விரும்பி வாசிப்பது-ரகசிய புதையல்! பூங்கனி போன்று பொது அறிவைத் தரக்கூடிய இதழை இதுவரை நான் பார்க்கவில்லை.

**தே.கிருஷ்ணவேணி,** தரம் 10, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

---

ஆகஸ்ட் மாத விடுமுறை ஸ்பெஷல் சூப்பரோ சூப்பர். எமக்கு பாடசாலையாக இருந்தாலும் 2நாட்கள் கட் பண்ண வைத்துவிட்டீர்கள். அதில் வந்த குறுக்கெழுத்துப் போட்டியை தொடர்ந்தும் வெளியிடலாமே! பூங்கனிக்கு பற்பல கோடி வாழ்த்துக்கள்.

**தே.தேலக்ஷன்,** தரம் - 10, கனகராஜன்குளம் ம.வி.

---

ஆகஸ்ட் மாத பூங்கனியே! விடுமுறை ஸ்பெஸலில் வந்த ஆக்கங்கள் அனைத்தும் எங்களை மயக்கிவிட்டன.

**த.பவானி,** தரம் 13, சின்னடம்பன், பாரதி வித்தியாலயம்.

---

என்றும் என் இனிய பூங்கனியே!
நீ தாங்கிவரும் அம்சங்கள் என்னைமிகவும் கவர்ந்து விட்டன. எனக்கு மிகவும் பிடித்தது ரகசியப் புதையல். மிகவும் விறுவிறுப்பாகவுள்ளது. பூங்கனியின் உள்ளே நிறம் தீட்டி பல வர்ணங்களில் வெளிவர வாழ்த்துகிறேன்.

**யோ.மேகலா,** தரம் 10A, மு/உடையார்கட்டு ம.வி.

---

பூங்கனி தென்றலே!
ஆகஸ்ட் மாத விடுமுறை ஸ்பெஸல் எங்களுக்கு கிடைத்த வரப் பிரசாதமாக அசத்திவிட்டதே. எங்கள் வரத்திற்கு உன்னுடைய வரவே அடித்தளம்.

**த.பசீலன்,** தரம் 9, சின்னடம்பன். பாரதி வித்தியாலயம்.

---

அன்புடன் பூங்கனி ஆசிரியருக்கு!
பூங்கனியின் யூலை மாத இதழ் சூப்பர். அதில் என்னைக் கவர்ந்தது மாதமொரு பாடசாலை. அதில் எங்கள் பாடசாலையும் இடம்பெறாதா என்று ஏக்கம். இதனை பூங்கனி நிறைவேற்றுமா?

**கலைவாணி சுப்பிரமணியம்,** வாரிக்குட்டியூர், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிக நீளமான குகை - கிளாம் குகை.

# நீங்கள் சொன்னவை

ஆகஸ்ட் மாத பூங்கனி மிகவும்
பிரமாதம். விடுமுறை ஸ்பெஸல்
சூப்பரிலும், சூப்பர். பூங்கனி
மாணவர்களுக்கு உறுதுணையாக அமைகிறது.
அ.அனோஜா, தரம் 10,
வ/கனகராயன்குளம் ம.வி

திகட்டும் பூங்கனியே!
மாதந்தோறும் நீ எம்மை இன்ப வெள்ளத்தில்
மகிழவைக்கிறாய். குறும்புக்குமரன்
சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கிறான்.
கணினி கண்ணா கணினி அருமை.
பூங்கனியே உனது பணி
தொடரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.
லாசரஸ்பிரகாஸ், தரம் 7B, சிதம்பரபுரம், வவுனியா

பூங்கனியில் அனைவரும் சிரித்து மகிழ
நகைச்சுவைக் கேள்வி - பதில் பகுதி
ஒன்றை ஆரம்பிக்க மாட்டீர்களா?
ஹம்சவாஹினி தியாகராஜா
மீசாலை கிழக்கு,
மீசாலை, யாழ்ப்பாணம்.

பூங்கனி ஆசிரியருக்கு,
வணக்கம். சென்ற மாத இதழில் "பட்டப்படிப்பு"
என்ற எனது சிறுகதையை முதற் பக்கத்தில்
பிரசுரித்துள்ளீர்கள் மிகவும் சந்தோசமாக
உள்ளது. என் ஆக்கங்களை நீங்கள் தொடர்ந்தும்
பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன்.
சி.சிவயாழினி, வ/சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி.

புதிய வடிவமைப்பில் பூங்கனி இதழ்
மாணவர்களுக்கு மிகப் பயனுடையது
என்பதில் ஐயமில்லை. உங்கள் சஞ்சிகை
வளர்ந்து எமக்கு பயன்தர வேண்டுமென
வாழ்த்துகிறேன்.
போ.ஜெயதீபா
தரம் 9, வ/குளவிசுட்டான் அ.த.க.பா,
நெடுங்கேணி.

அன்பான பூங்கனிக்கு வணக்கம்!
நீ எழுதும் மாதம் ஒரு பாடசாலை,
மாணவர் பக்கம், பொது அறிவு துணுக்குகள்,
போன்றவை என் மனதைக் கவர்ந்தவை.
அதிலும் ரகசியப் புதையல் மர்மக்கதை
சூப்பரிலும், சூப்பர்.
உன் பயணம் நீடிக்க கோடி வாழ்த்துக்கள்.
ப.ரஜீவனா, தரம் 10, வ/நெடுங்கேணி ம.வி

அன்பான பூங்கனியியே!
புதுமெருகுடன் செல்லும் வெற்றிக்கனியே!
தேன் சொட்டும் மாங்கனியே!
உன் ஆக்கங்கள் யாவும் சிறந்தவையே!
சிறுவர்களிடையே ஏக்கங்கள் அன்று!
அவையனைத்தும் தீர்ந்தது இன்று!
பூங்கனியோ மிகவும் நன்று!
சு.மங்களேஸ்வரி
தரம் 8B, வ/புளியங்குளம்
இந்துக் கல்லூரி.

பூங்கனிக்கு வணக்கம்!
நீ தாங்கிவரும் அனைத்து விடயங்களும்
மிகச் சிறப்பானவை. மேலும் அட்டைப்படம்,
ஒருவரிச் செய்திகள், ரகசியப் புதையல்
என்பன மிகவும் அருமை.
உன் பணி தொடரட்டும்.
இ.றமேஷ், தரம் 10, மு/அளம்பில் றோ.க.பா.

அன்பான பூங்கனிக்கு!
அன்பான பூங்கனிக்கு எனது வணக்கம்.
பூங்கனி மாத இதழ் மிகவும் தரமாக
இருக்கின்றது. அதிலும் ரகசியப்புதையல்,
வன்னியின் கதை, மருத்துவப் பக்கம்
ஆகியவை என்மனதை மிகவும் கவர்ந்துள்ளன.
க.ராகுலன், தரம் 7A,
வ/கனகராயன்குளம் ம.வி

வாசகர் மனதை கொள்ளைகொண்ட பூங்கனியே!
நீ எம் அறிவுக் கண்களைத் திறந்துவிட்டாய்!
எம் போன்ற மாணவ சகோதரர்களுக்கிடையே
இலைமறை காயாய் மறைந்திருக்கும் ஆற்றல்களை
வெளிக்கொண்டுவர வாய்ப்பளித்ததற்கு நன்றி.
ச.சசிகலா, வ/இந்துக் கல்லூரி.

**முகப்பில் யதுநந்தினி**



நோர்வே அனுபவங்கள்.....
உலகின் கூரை என அழைக்கப்படும் நாடு - சீனா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணி ம.வி

ஊடக அனுசரணை **பூங்கனி**

*29.07.2005* வெள்ளிக்கிழமை! வ/நெடுங்கேணி ம.வி மைதானம் விழாக்கோலம் பூண்டிருந்தது! மைதானத்தைச் சுற்றிலும் பலவர்ணக் கொடிகள்! வர்த்தக நிலையங்களின் விளம்பரப் பதாகைகள்! **"ஊடக அனுசரணை பூங்கனி"** எனும் பதாகை பளிச்சிட்டு பார்ப்போரின் கவனத்தை ஈர்க்க, இன்னும் சொற்ப வேளையில் ஆரம்பமாகப் போகிறது அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி!

தனது வலயப்பாடசாலைகள் மத்தியில் விளையாட்டின் மூலம் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி.தண்டாயுதபாணி அவர்களின் உள்ளத்தில் உதிக்க, அதன் விளைவே நெடுங்கேணி ம.வி எதிர் புதுக்குளம் ம.வி அணிகளுக்கிடையேயான இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி!

நெடுங்கேணி நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து பாடசாலை வாயில் வரை, பாதையின் இரு மருங்கும் மாணவர்கள் வரிசையாக நிற்க, இன்னிய அணி, அணிநடை சகிதம் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

பிரதம விருந்தினர்களுக்கு இரு அணியின் வீரர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து போட்டி ஆரம்பமானது.

முப்பது ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குளம் ம.வி அணி, முப்பது ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது.

உணவு இடைவேளைக்குப் பின், 180 ஓட்டங்களை



"எமது வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு. சி.தண்டாயுதபாணி அவர்கள் நெடுங்கேணி மகாவித்தியாலயத்திற்கும், புதுக்குளம் மகாவித்தி யாலயத்திற்கும் இடையே வருடாவருடம் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி நடைபெற வேண்டுமென திட்டமிட்டார், எமது பாடசாலை சமூகம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், வலயக் கல்வி அதிகாரிகள் வழங்கிய முழு ஒத்துழைப்புக் காரணமாக இப்போட்டி மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. இப்போட்டி தொடர்ந்தும் நடைபெற வேண்டும் என விரும்புகிறேன்.

திரு.மு.குகதாசன், அதிபர், வ/நெடுங்கேணி ம.வி.

# மாபெரும் மென்பந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vs புதுக்குளம் ம.வி

இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது நெடுங்கேணி ம.வி அணி.

புதுக்குளம் ம.வி அணியின் லாவகமான பந்துவீச்சும், சிறந்த களத்தடுப்பும் சவாலாக அமைய 24 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது நெடுங்கேணி ம.வி அணி!

எனவே 81 மேலதிக ஓட்டங்களுடன் வெற்றிக் கிண்ணம் புதுக்குளம் ம.வி அணியின் கைகளுக்கு வந்தது!

போட்டி நிறைவு பெற்றதும் பரிசளிப்பு வைபவம் ஆரம்பமானது!

சிறந்த பந்துவீச்சாளராக அருள்நேசனும் (பு.ம.வி. அணி) சிறந்த களத்தடுப்பாளராக கோபி (நெ.ம.வி அணி)யும், ஆட்டநாயகனாக பி.பாலேந்திரனும் (பு.ம.வி. ணி) தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்விரு அணிகளுக்குமிடையேயான இப்போட்டி (Big Match) இனி வருடா வருடம் தொடர்ந்து நடைபெறும்.

"அடுத்தவருடம் எமது பாடசாலையில் இப்போட்டி நடைபெறும் போது நெடுங்கேணி ம.வி அணி வெற்றிபெற வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார் புதுக்குளம் ம.வி அதிபர்..

இதுபோன்ற இன்னுமொரு Big Match புளியங்குளம் இந்துக் கல்லூரிக்கும், கல்மடு மகாவித்தியாலயத்திற்கும் இடையில் விரைவில் நடைபெறவிருப்பதாக அறிய வருகிறது. ■



"இப்போட்டியில் எமது அணி வெற்றிபெற்றமை எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இப்போட்டி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இதனை ஒழுங்கமைத்து, வழிகாட்டி, கடைசிவரை களத்தில் நின்ற எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி.தண்டாயுதபாணி அவர்களின் வழிகாட்டல் எம்மை மெய்சிலிர்க்க வைத்துள்ளது. மிகச்சிறப்பாகவும், நிதானமாகவும் விளையாடி வெற்றியைத் தந்த எமது வீரர்களுக்கு எனது நன்றிகள்.

**திரு.தா.அமிர்தலிங்கம்** அதிபர், வ/புதுக்குளம் ம.வி.



**வலயக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்**

வவுனியா வடக்கு கல்வி வலயம் சமூக, பொருளாதார அடிப்படையிலும், கல்வியிலும் பின்தங்கி இருப்பதைப் போன்று, விளையாட்டுத்துறையிலும் பின்தங்கியிருக்கிறது. ஆகவேதான் விளையாட்டில் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் எமது மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்த எண்ணினேன்! இதன் விளைவே இந்த Big Match

# கிரிக்கெட் போட்டி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.S.வாசன் எழுதும்

"உலக வரலாறு" 3

# ஹோமோ இரக்ரஸ்

மனித வரலாற்றை நாம் தெளிவாக அறிந்து கொள்ள மண்டை ஓடுகளே உதவின. பல்வேறு மனிதர்களதும் மண்டைஓடுகள்,எலும்புக் கூடுகளும் மனித இன வரலாற்றை விளங்க வைக்கின்றன. இதில் மிகவும் தொண்மையானது ''யாவா மனிதன்'' எழும்புக்கூடாகும் இவனே முதல் மனிதன் என நம்பப்படுகின்றான். ஆசியாவிலேயே முதல் மனிதன் பிறந்தான். இதனால் தானோ என்னவோ ஆசியாக்கண்டம் அதிக குடித்தொகை கொண்ட பிரதேசமானது!



இன்று உலகக் குடித்தொகையில் 50%ற்கு மேல் இங்கு வாழ்கின்றார்கள். இந்த யாவா (இந்தோனேசியத்தீவுகளில் ஒன்று ) மனிதனே ஹோமோ இரக்ரஸ் என அழைக்கப்படுகிறான். இம்மனிதனின் மண்டையோடு கி.மு 8 கோடி ஆண்டுகள் பழமையானது. இந்தோனேசியக் காடுகளில் இவன் வாழ்ந்திருப்பான். இம்மனிதனின் மண்டையோடு ஒரு மணிதக் குரங்கினைப்போல தட்டையாக இருந்தது. நெற்றி நேராக இல்லாது பின்புறஞ்சாய்ந்து இருந்தது. பேசும் ஆற்றல் குறைந்து காணப்பட்டது. இவனின் மண்டைஓடு, பற்கள், மூளை என்பன மனிதப்பண்புகளை ஒத்திருந்தன. நெற்றி, தாடை, குரங்கினை ஒத்திருந்தன. இன்றுள்ள மனிதனை விட மிக எளிதாக மரம் ஏறினான். கற்கருவிகளை உபயோகித்தான். ஒரு நாளில் நீண்ட நேரம் கருவிகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டான். உணவுக்காகச் சமவெளிகள், காடுகளில் அலைந்து திரிந்தான் மரங்களை வெட்டுவதற்கும் கற்கள் இவனுக்க உதவியுள்ளன.

1926 ம் ஆண்டு சீன நாட்டின் பீகிங் நகரத்திற்கு தென்மேற்கே கண்டெடுக்கப்பட்ட மனிதன் பீகிங் மனிதன் எனப்பட்டான். பீகிங் மனிதனின் நெற்றி குருகி, பின்சரிந்து இருந்தது. புருவங்கள் புடைத்துக் காணப்பட்டன. பிளித்தோசீன் காலத்தில் வாழ்ந்ததாக கருதப்படும் பீகிங் மனிதனிடமும் குரங்குக் குணங்கள் காணப்பட்டன. இமய மலை தொடக்கம் யெனசிப் பள்ளத்தாக்கு வரை இம்மனிதன் வாழ்ந்துள்ளான். கி.மு 460,000 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் பீகிங் மனிதன் கண்டறியப்பட்டான். இவனும் கல் ஆயுதங்களை உபயோகித்துள்ளான். விலங்குகளின் பாகங்கள் இவ்வகைக் கல்லாயுதங்களால் வெட்டி எடுக்கப்பட்டன. பெண்களும் வயதில் பெரியோருமே இறைச்சி போன்ற உணவுகளை முதலில் உண்ணும் பழக்கம் காணப்பட்டது. விலங்குகள் போன்று புணரும் பழக்கம் இவர்களிடம் காணப்பட்டது ஆடைகளின்றி ரோமங்கள் கொண்ட தேகங்களுடன் அலைந்து திரிந்தனர்.

கல்லாயுதங்களின் கண்டுபிடிப்பே இம்மனிதர்களின் மிகப்பெரிய புரட்சியாக அமைந்தது. இதனால் இது கல்லாயுத யுகம் என அழைக்கப்பட்டது இது இரண்டு வகைப்படும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் வெப்பநிலை தற்போது 11°C அதிகரித்திருக்கிற.

**1. புராதன கல்லாயுத யுகம் :-**

இயற்கையான கற்துண்டுகளைக் கொண்ட வளர்ச்சியடையாத கல்லாயு தங்கள் இவை யாகும்.



**2.நவீன கல்லாயுத யுகம்:-**

வளர்ச்சி பெற்ற கல்லாயுதங்களைப் பயன்படுத்திய காலம்.

## ஹோமொ நியண்டதால்

ஜேர்மனி நாட்டில் பெரும் பனியுகத்தை சேர்ந்த மனிதன் ஹீடல்பர்க் எனப்பட்டான் இவனது சுவடுகள் ஆற்று மணலில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டன இவனும் குரங்கினதும் மனிதனினதும் இயல்பை ஒத்தவனாக இருந்தான்.

தாடை குரங்கினைப் போன்றதாக இருந்தது இவனும் காடுகளிலும் சமவெளிகளிலும் வசித்தான் கல்லாயுதங்களின் வளர்ச்சிநிலை அபரிமிதமானதாக இவனது காலத்தில் இருந்தன பேசும் திறன் இவனிடம் இருக்கவில்லை

மௌஸ்டீரியன் என்ற காலத்தில் மனிதன் குகைகளில் வசிக்கத் தொடங்கினான் பனியுகத்திற்குப் பிறகு வாழ்ந்த மனிதனின் சிதைவுகள் முழு எழும்பக்கூடாக ஐரோப்பாவில் கிடைத்தது அதுவே ஜேர்மனியின் நியண்டதால் மனிதனின் எழும்புக்கூடாகும் இவன் கி.மு முப்பதாயிரம் *(30,000)* ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

*1856*ல் ஒரு மண்டையோடும் கால் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டன எட்டு ஆண்டுகளுக்கு முன் *1848* ல் மத்திய தரைக்கடலில் உள்ள ஜிப்ரால்டர் தீவுக்கு அருகில் கிடைத்த எலும்புக்கூடுகள் நியண்டதால் மனித இனத்தைச் சேர்ந்தவையாக இருந்தது.

நியண்டதால் மனிதனின் தாடைகள் பெரியனவாகவும், வலிமையுடையனவாகவும் இருந்தன பெரிய பற்கள், பெரிய மூளை, என்பவற்றை கொண்ட இம்மனிதன் சற்று முன்னேற்றகரமானவன் உளி கத்தி கோடரி போன்ற ஆயுதங்களையும் இவன் பயன்படுத்தினான் எலும்புகளால் ஆயுதங்கள் செய்யப்பழகிக் கொண்டான் இறந்தவர்களை அடக்கம் செய்தல் புகைத்தல் போன்ற பழக்கங்கள் இவர்களிடம் காணப்பட்டன. உயர்ந்த இறைச்சிப் பிரியர்களாக இருந்த இவர்கள் புழு, எறும்பு, அழுகிய முட்டைகளையும் உண்டனர் மீன் உணவுகளை உண்ணுதல், வேட்டையாடுதல் நன்கு அறிந்திருந்தனர்.

மூன்றாம் இடப்பனியுகத்தில் குளிரால் பாதிக்கப்பட்டோ அல்லது குரோமக்னன் என்ற இனத்தால் தாழ்த்தப்பட்டோ நியண்டதால் மனிதன் ஐரோப்பாவினின்றும் வெளியேறி இருக்கலாம் என நம்பப்படுகின்றது




உலகில் மிகப்பெரிய எரிமலை - மௌனா ஹொவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோடீசியன் மனிதனே ஐரோப்பா கண்டத்திற்கும், ஆப்பிரிக்கா கண்டத்திற்குமிடையே தொடர்பை ஏற்படுத்தியவன் நியன்டதால் மனிதனின் சந்ததியான இவன் நியன்டதால் மனிதனைப்போல் கூன்முதுகுடன் இல்லாது நிமிர்ந்த முதுகுடன் நின்றான்!

இம்மனிதனின் உருவம் மாறுபட்டு படிப்படியாக சூழ்நிலைக்கேற்ப சிறிது உடலமைப்பு உருவம் மாறுபட்டபோது அவன் குரோமக்னன் மனிதன் எனப்பட்டான் அறிவுத்திறன் இவனிடம் அதிகமாக இருந்தது. முகம் சதுரமாயும் தாடை எலும்புகள் அளவுக்கதிகமாக வளர்ந்தும் காணப்பட்டன. மூக்கு நீண்டதாயும் நேரான பக்கத்தே ாற்றங்களைக் கொண்டதாயும் காணப்பட்டன கிட்டத்தட்ட தற்கால செவ்விந்திய மக்களைப் போன்ற தோற்றத்தை குரோமக்னன் மனிதன் கொண்டிருந்தான். இவன் வேட்டையாடியும் மீன் பிடித்தும் வாழ்ந்து வந்தான் வில், அம்பு ஆகியவற்றின் உபயோகத்தை அறிந்திருந்தான்.



விலங்குகளை குகைகளுக்குள் துரத்திச் சென்று வேட்டையாடுதல், அவற்றை பதப்படுத்தி உண்ணுதல் மீன்களைப் பிடித்து வேகவைத்து உண்ணுதல் என்பன காணப்பட்டன. ஹோமோ நியன்டதால் தோல் ஆடைகளை உடுத்தினான் ஹோமோ இரக்ரஸ் ஆடைகளை உடுத்திய சான்றுகள் இல்லை. குரோமன்கள் ஆடை அலங்காரங்களில் ஈடுபட்டனர் பெண்கள் ஆபரனங்களை அணிவதிலும் இசைக்கருவிகளை எலும்பாலான புல்லாங்குழல்களையும் பயன்படுத்தி உள்ளனர் குகைகளை வாழ்விடமாகக் கொண்ட இவர்கள் மலையுச்சிகளில் அதிகம் பாதுகாப்பாக வாழ்ந துள்ளனர். இவ்வகைப் பெண்கள், மனிதர்களுக்கும் ஏனைய சமூகத்திற்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தினர்.

---

“அம்மா, என் தலையிலே ஒன்றுமே இல்லையாம், டீச்சர் திட்டுறாங்க”



“அதுதான் தினமும் உன்தலையிலே பூவைத்து அனுப்புகிறேனே, அதை உன் டீச்சர் பார்க்கலையா?”





உலக நீர் தினம் மார்ச் 22ல் கொண்டாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மதமும் சம்மதமே

## ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நல்லகாரியங்கள் செய்யும்போது "ஓம் சாந்தி சாந்தி சாந்தி" என்று மூன்றுமுறை சொல்கிறோமே எதற்குத் தெரியுமா?

நம் வாழ்க்கையில் தடைகளை ஏற்படுத்தக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்காகத்தான்! அவையாவன 1) **ஆதி தைவிகம்** (மின்னல், இடி, பூகம்பம், மழை போன்ற இயற்கை அழிவுகள்), 2) **ஆதி பௌதீகம்** (சப்தம், மிருகங்கள், பறவைகள், போன்றவற்றால் ஏற்படும் தீங்குகள்), 3) **ஆத்யாத்மிகம்** (நம் உடலில் தோன்றும் நோய்கள்) என்பனவே அவை.

## ஆத்மாவில் எளிமையானவர்கள்....

இயேசுபிரானின் மலைச் சொற்பொழிவு உலகப் புகழ்பெற்றது! ''ஆத்மாவில் எளிமையானவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், ஏனெனில் மோட்ச சாம்ராஜ்யம் அவர்களுக்குரியது" என்கிறார் இயேசு பெருமான். அதாவது எமது ஆத்மா கபடு, சூது, வஞ்சனை எதுவும் அறியாமல் தூய்மையாக இருந்தால் எமக்கு ஆண்டவனின் அருள் கிடைப்பதோடு மோற்ச சாம்ராஜ்யமும் கிடைக்கும்.

## அமல்களில் சிறந்தது....

"நாட்களில் சிறந்தது வெள்ளிக்கிழமை. இந்நாளில் என்மீது ஸலவாத் ஓதுங்கள். அது என்னிடம் சமர்ப்பிக்கப்படுகின்றது" என்பது அருமை நபி (ஸல்) அவர்களின் அறிவுரையாகும். அமல்களில் சிறந்தது ஸலவாத் ஓதுதல் ஆகும். சிறந்த நாளான வெள்ளிக்கிழமையில் சிறந்த அமலான ஸலவாத் ஓதுதல் மூலம் அதிக நன்மைகள் கிடைக்கும். ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெடிசியா என் அழைக்கப்படும் நாடு ஸிம்பாவே.

# வலயச் செய்திகள்

## வவுனியா வடக்கு வலயத்தில் சாரணர் முகாம்.

வவுனியா வடக்கு வலயப்பாடசாலைகளில் இணைபாடவிதானம் மந்தநிலையில் இருப்பதால், இதனை நிவர்த்தி செய்யும்பொருட்டு, மாபெரும் சாரணர் முகாம் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டிருக்கிறது வவுனியா வடக்கு வலயம்.


வவுனியா மாவட்ட சாரணர் சங்க அனுசரணையுடன் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இச்சாரணர் முகாமில் திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் சிரேஷ்ட சாரணத்தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதற்கான இடமும், திகதியும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

## கல்வி அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டங்கள்!

யுனிசெ.ஃப் **(Unicef)** நிறுவனத்தின் ஆதரவோடு வவுனியா வடக்கு கல்வி வலயம், தனது பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது அவையாவன.

01. ஆரம்ப கல்வி, இழந்த கல்வியை மீளப் பெறுதல்
02. இடைநிலைக்கல்வி, இழந்த கல்வியை மீளப் பெறுதல்.
03. மாணவர் வரவினை மேம்படுத்தல்.
04. கல்விசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள் போன்றோரின் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்.
05. பிள்ளை நேயப் பாடசாலை.
06. எயிட்ஸ் நோய் (Aids) விழிப்புணர்வு
07. பாடசாலைமட்டக் கணிப்பீடு
08. விஞ்ஞான, கணித பாடங்களில் மாணவர்களுக்கு சரியான எண்ணக்கருக்களைப் புலப்படுத்தல்.

## இலக்கங்களை இணைத்து ஒளிந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரில் நீந்திக்கொண்டே தூங்கும் பிராணி - வாத்து.

அந்தப் பையன் வேறு யாருமில்லை கணித நிபுணன் பாஸ்கல் தான்! அவன் என்ன செய்வான் தெரியுமா? கூட்டல் கழித்தல் என்பனவற்றைச் செய்வதற்கு எண் சக்கரக் கணிப்பான் ஒன்றைக் கண்டுபிடித்தான்.(Numerical Wheel Calculator) இது தான் உலகின் முதலாவது கூட்டல் இயந்திரம். அதன் பின்பு 1673 இல் காட் பிரட் வில்ஷெம் வான் லிப்னீஸ் (பல்லுச் செருகிவிடும் கவனமாக வாசியுங்கோ...) என்பவர் பாஸ்கருடைய இயந்திரத்தை கொஞ்சம் மாற்றி பெருக்கல், வகுத்தல் எல்லாம் செய்கிற ஒரு கருவியை உருவாக்கினார். என்றாலும் பாஸ்கருடைய கண்டுபிடிப்பு அளப்பெரியது என்பதால் இவர் பெயரில் கணனி மொழி (Langue) ஒன்று இருப்பதை அறிந்திருப்பீர்கள். (Pascal Languae)

ஆனாலும் கணினி உருவாக்க வரலாற்றில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சார்லர்ஸ் பாபேஜ் என்பவர் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார். இவர் புதிது புதிதாக பல விடயங்களை வைத்துக் கொண்டிருந்தார் ஆனால் அவரால் அவற்றையெல்லாம் செயலாக்க அந்தக்கால அறிவியல் துறை அவ்வளவாக முன்னேறவில்லை.



வெட்டி வேலை என்றுகூடப் பேசினார்கள் (சுட்டிகளே உங்களை இப்படி யாரும் பேசினாலும் நீங்கள் உங்கள் ஆராய்ச்சிகளை விட்டுவிடாதீர்கள் என்ன? அதற்காக சும்மா கிடக்கிற சாமான்களை சுட்டியலால உடைச்சிடா தீங்கப்பா.....) அத்தனைக்கும் நடுவில் அந்த மனுசன் கஸடப்பட்டு 1812- அவராகவே ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். இது கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது. அதன் பின்னர் ஆசாமியிடம் ஏதோ விசயம் இருக்கிறது என்று நினைக்க ஆரம்பித்தார்கள். அவரும் “அனலடிகல் என்ஜின்” என்ற ஒன்றைச் செய்கிறேன் என்று ஏதோ செய்து கொண்டிருந்தார். ஆனால் அப்போதைய தொழில் நுட்பம் அவருக்கு கைகொடுக்கவில்லை. அவர் நினைத்ததை




ஐரோப்பாவின் மிக உயரமான மலை எல்புருஸ் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக முடிக்க வில்லை.

அப்புறம் எத்த னையோ கணக்குப் போடும் கருவிகள் பலராலும் கண்டுபிடிக்கப்பட்டு வந்தன, ஆனால் புதிதாக எதையும் சொல்வதற்கில்லை.

ஆனால் 1944 வெளிவந்த மார்க்-1 என்ற கணினி



எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது! ஷேவார்ட் ஜக்சன் என்பவரது ஆராய்ச்சிகளை அறிந்த (IBM) ஐ.பி.எம் நிறுவனம் அவருக்கு பொருளுதவி அளிக்க, மார்க்-1 உதயமானது! சார்ள்ஸ் பாபேஜின் எண்ணங்களை பூரணப்படுத்து வதாக இந்தக் கணினி இருந்தது. ஆனால் ஜக்சன் இதைச் செய்கின்றபோது பாபேஜின் அனலடிகல் என்ஜினைப் பற்றியோ , அவரது குறிப்புக்களையோ அறிந்திருக்கவில்லை என்பது தான் வேடிக்கை. ஆனாலும் சார்ள்ஸ் பாபேஜின் ஆராய்ச்சிகள் தான் கணினியின் உருவாக் கத்திற்கு அடிப்படையாக அமைந்தன. எனவேதான் அவரை கணினியின் தந்தை என்று அழைக்கிறார்கள் (கணினிக்கே அப்பன் அப்பா...)

இன்னொன்று தெரியுமா? பெண்குலமே உங்களுக்கும் ஒரு

## இதைத் தெரியுமா?

## நட்பு


பணத்தினால் வருவது நட்பல்ல!
பாசத்தினால் வருவதே நட்பு!
கல்லூரி காலம் முடியும் வரை
வருவதல்ல நட்பு!
காலம் காலமாகத் தொடர்வதே நட்பு!
நட்புக்கு ஆண் பெண் என்ற
வித்தியாசமில்லை!
நட்புடன் பழகுபவர்களை வேறு
நோக்கத்துடன் பார்ப்பவர்க்கு
ஒரு புரியாத புதிர் நட்பு!
இதுவே உண்மையான, உன்னதமான
சிறந்த நட்புக்கு உதாரணம்!
நட்பைப் பற்றி புரியாதவர்கள்
நட்பு கொள்வதில் அர்த்தமில்லை!

யோ.சுகுணா
தரம் 10
வ/நெடுங்கேணி ம.வி



கொங்கோ ஜனநாயக குடியரசு முன்பு சயர் என அழைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருமை இருக்கிறது. லார்டு பைரன் என்று ஒரு புகழ் பெற்ற கவிஞர் இருந்தார் தெரியுமா? (அட அட அது லார்டு லபக்கு தாஸ் தம்பி! அதை விட்டிட்டு இதைக் கவனியுங்கோ)

அவருடைய மகள் லேடி லவ்லேஸ். (Lady Lovelace) இவர் பாபேஜை பின்பற்றி முதன் முதலில் கணினியை இயக்கும் புரோகிரா ம்களை முறையாக எழுதினார் எண்டாப் பாருங்களேன். அதனால அம்மணி உலகின் முதல் "கம்யூட்டர் புரோகிராமர்" என்ற பெயரையும் தட்டிச் சென்றுவிட்டார்.

இப்ப நாங்க இந்த மார்க்-1 இன் அமைப்பைப் பற்றி கொஞ்சம் பார்க்கலாம். 50 அடி நீலமும் 8 அடி உயரமும் 2 அடி அகலமும் இருந்தது என்றால் பாருங்களேன். இப்ப உள்ள கணினிகளுடன் ஒப்பிடும் போது அப்பாடா இப்ப இது இருந்தால் நம்மூரில் காணி விலைக்கு வைத்துப் பாவிப்பதெல்லாம் பெரிய பிரச்சனையாக இருந்திருக்கும். மேலும் 5 தொன் எடை உடையது. அதில் பயன்படுத்திய இணைப்புக் கம்பிகளை இணைத்தால் அதன் நீளம் 800 கி.மீ வருமாம். மொத்தமாக 8 இலட்சம் இயந்திர உறுப்புக்களை கொண்டதாம்.

இப்படியாக படிப்படியாக கணினியின் தோற்றம் விருத்தியாகின்றது. அடுத்து வரும் கணினிகளையும் கணினித் தலைமுறைகளையும் அப்புறம் பார்ப்போம் இப்போதைக்கு விடைபெறுகிறேன்.

(மிகுதி அடுத்த Clickல்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
நோபல் பரிசு அதிகம் வாங்கிய நாடு - அமெரிக்கா.

# அருந்ததியின் அறிவுப் போட்டி

இல. 06



ஜுலை மாத இதழில் கேட்கப்பட்ட பத்து கேள்விகளுக்குமான சரியான விடைகளோடு ஏராளமான தபாலட்டைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் குலுக்கல் முறையில் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**பரிசுபெறுவோர்**

① செல்வி. வி.துளசி
இல. 402, 1ம் குறுக்குத்தெரு,
இறைபைக்குளம்,
வவுனியா.

② த.சுகந்தன்
15/7, 5ம் ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா.

**இருவருக்கும் எமது வாழ்த்துக்கள்**

ரூ. 1000 பெறுமதியான வவுச்சர்கள் இரண்டு இருவருக்கும் பரிசாக வழங்கப்படுகிறது. அவற்றைக்கொண்டு அருந்ததி சூப்பர் மார்க்கெட்டில் நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

**சரியான விடைகள்**

1. சமாதானம்
2. International Labour Organization
3. அமெரிக்கா - CIA
4. சர்வதேச பொலிஸ் ஆணைக்குழு International Police Commission
5. தென்சீனக் கடல்
6. புவனாஸ் அயஸ்
7. நீளம் 3570 கி.மீ
8. பெசோ
9. 11.11.1918
10. கிரியோடே` கி.கி

வெற்றிபெற்றோருக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும். பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்கள்.



சுதந்திர மனிதர் என அழைக்கப்படுபவர் - நெல்சன் மண்டேலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகள்

1. ஆறு கடலுடன் கலக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
2. உலக வங்கியின் தலைமையகம் எங்குள்ளது?
3. பட்டினிச்சாவு காரணமாக பயங்கரவாதம் தோன்றிய நாடு எது?
4. இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் யார்?
5. இலங்கை ஜனாதிபதியின் பதவிக்காலம் எவ்வளவு?
6. சர்வதேச மகளிர் தினம் எப்போது?
7. சார்க் அங்கத்துவம் பெற்ற நாடு எத்தனை?
8. இலங்கையில் வானொலிச் சேவை ஆரம்பமான ஆண்டு எது?
9. "ருவென் வெலிசாய" தூபியினை அமைத்த மன்னன் யார்?
10. இலங்கையின் முதலாவது வைத்தியசாலை எது?

**முடிவு திகதி**
**30-09-2005**

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**அருந்ததியின் அறிவு போட்டி-இல-06**
அருந்ததி சுப்பர் மார்க்கெட்,
361, ஹொரவபொத்தானை வீதி,
வவுனியா.


**ARUNTHATHY SUPER MARKET**

உயர் தரத்தினாலான மளிகைப் பொருட்கள்,
இறக்குமதி செய்யப்பட்ட உணவுவகைகள்,
அனைத்து வகையான ஐஸ்கிறீம் வகைகள்,
.:.பான்சிப் பொருட்கள், சொக்கலேட்
வகைகள், பரிசுப் பொருட்கள், மற்றும்
அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.!

**அருந்ததி சுப்பர் மார்க்கெட்**
இல: 361, ஹொரவப் பொத்தானை வீதி, வவுனியா.


சார்க் அமைப்பின் முதலாவது மாநாடு டாக்காவில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழித்தின விழா — 2005

வவுனியா வடக்கு கல்வி வலய தமிழ் மொழித்தின விழா 19.07.2005 (செவ்வாய்க்கிழமை) வ/புளியங்குளம் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. தண்டாயுதபாணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரபல எழுத்தாளர் முல்லைமணி முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பாவோதல், குழுநடனம், பேச்சு, இசையும் அசைவும், சிந்துநடைக் கூத்து எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றதோடு வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

**க.டினேசன்**
புளியங்குளம்

# ஒருவரித் தகவல் தந்தோர்

இவ்விதழில் இடம்பெற்றுள்ள ஒருவரித்தகவல்களைப் பலர் சேர்ந்து தொகுத்துள்ளனர். அவர்களது விபரம்.

| பக்கங்கள் | தொகுத்தோர் |
|---|---|
| 01 - 20 | மா.ருக்ஷினி, தரம் 10C<br>வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி |
| 21 - 25 | ச.டியானிசி, தரம் 12 (கலை)<br>வ/பூவரசங்குளம் ம.வி |
| 26 - 30 | அ.சிவசுகேந்தினி, தரம் 5E<br>வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி |
| 31 - 35 | தே.வாகீஸ், தரம் 6E,<br>வ/தமிழ் மத்திய ம.வி |
| 36 - 40 | செம்சன் ஸ்ரெலா, தரம் 8B<br>மு/மல்லாவி மத்திய கல்லூரி |
| 41 - 45 | K.சரோஜினிதேவி,<br>வற்றாப்பளை, முள்ளியவளை |
| 46 - 50 | பி.சித்திரா, தரம் 10,<br>வ/வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம். |
| 51 - 56 | மா.நித்தியா,<br>வற்றாப்பளை, முள்ளியவளை. |





மோட்டார் சைக்கிளை பிரதானமாக உற்பத்தி செய்யும் நாடு - ஜப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்

## உலக நாடுகளின் தேசியச் சின்னம்

அமெரிக்கா ~ தங்கத்தடி
அவுஸ்திரேலியா ~ கங்காரு
பிரான்ஸ் ~ அல்லிமலர்
பிரித்தானியா ~ ரோஜாமலர்
கனடா ~ வெள்ளை மலர்
இந்தியா ~ சிங்கத்தின் தலை
ஈரான் ~ ரோஜாமலர்
ஈராக் ~ சிவப்பு ரோஜா
ஜப்பான் ~ கூட்டுப்புழு
பாகிஸ்தான் ~ பிறை

அ.சதுர்ஷன்
தரம் 8B,
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை.

## உலக வரலாற்றில் சில துளிகள்

- ரோம் நகரம் கி.மு. 753இல் ரொமியுலஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- சுயெஸ் கால்வாய் 1956இல் கமலா அப்துல் நசார் என்பவரால் தேசிய மயமாக்கப்பட்டது.
- பங்களாதேஷ் 1971இல் உருவாகியது.
- அமெரிக்காவில் 1920இல் பெண்களுக்கு வாக்குரியமையளிக்கப்பட்டது.

குணசேகரம் கௌசிகன்
தரம் 9A,
வற்றாப்பளை ம.வி

## பிராணிகளும் முட்டையின் நிறங்களும்

கொக்கு ~ வெள்ளை
காகம் ~ இளம்பச்சை
புளுனி ~ இளம்பச்சை
மைனா ~ நீலம்
முதலை ~ வெள்ளை
ஓணான் ~ வெள்ளை
ஆமை ~ வெள்ளை
நண்டு ~ மஞ்சள்
நத்தை ~ மஞ்சள்
மீன் ~ மஞ்சள்

மகாலிங்கம் கீர்த்தனா
1ம் வட்டாரம்,
முள்ளியவளை,

## சார்க்

சார்க் அமைப்பின் 12வது உச்சிமாநாடு ஜனவரி 4 ~ 6ம் திகதி 2004 வரை இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. அங்கு பின்வரும் நாட்டுத் தலைவர்கள் கலந்து

பங்களாதேஷ் ~ பிரதம மந்திரி பொகாம் காலிடாசியா
பூட்டான் ~ பிரதம மந்திரி வைன்போ ஜிக்மி திினிலி
இந்தியா ~ பிரதம மந்திரி அடேல் பிகாரி வாஜ்பாய்
மாலைதீவு ~ ஜனாதிபதி மயூன் மோன் அப்துல் கயூம்
நேபாளம் ~ பிரதம மந்திரி சூர்யா பகதூர் தாப்பார்
பாகிஸ்தான் ~ பிரதம மந்திரி மீர் ஜபுக்கான் ஜமீர்
இலங்கை ~ ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க

S.நவீன்
நெடுங்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் சைக்கிளை பிரதானமாக உற்பத்திசெய்யும் நாடு - யப்பான்.

மாணவர் பக்கம்

# தெரிந்து கொள்ளுங்கள்

- இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டம்.
- இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் மு. நல்லதம்பி
- சிட்னி ஒலிம்பிக்கில் (2000) அதிக தங்கப்பதக்கங்களை வென்ற நாடு அமெரிக்கா.

**பெ.ஆன்பெனாறின்**
தரம் 4E, வ/இறம்பைக்குளம்
மகளிர் மகா வித்தியாலயம்

# நட்பும் பண்பும்

நட்பு என்ற இந்த புனிதமான வார்த்தையை புரிந்துகொள்பவர்கள் மிகச் சிலரே. நட்பும், பண்பும் மனிதருடைய மிகப்பெரிய தேவை என வர்ணிக்கப்படுகின்றது. சிலர் இந்த இதமான உணர்வில் தழைத்தோங்குகிறார்கள். சிலரோ நட்பின் மகிமைதெரியாமல் இருக்கின்றார்கள். நாம் எம்மை எப்படிப்பட்டவர்களாய் கருதுகிறோம் என்பது முக்கியமல்ல. அடுத்தவர்கள் எம்மை எப்படி கருதுகிறார்கள் என்பதுதான் முக்கியம். மற்றவர்களுடைய சொல்வுக்கு மதிப்பளித்து அவர்களிடம் பண்பாகவும், நட்பாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

**கே.லோகேஸ்வரன்**
ஒலுமடு, நெடுங்கேணி.

# பழமொழிகளும் அவற்றின் கருத்துகளும்

- **அழுதபிள்ளை பால் குடிக்கும்.**
  முயற்சி செய்தவர் பயன் பெறுவர்.
- **இரக்கப் போனாலும் சிறக்கப்போ.**
  வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும்.
- **பேராசை பெரும்தரித்திரம்.**
  கோபம் ஒருவனுக்கு தீமையை ஏற்படுத்தும்.
- **பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.**
  தாய்ப்பாசம் மேலானது.

**ஞா.கிசான்திங்ஸ்ரைன்**
தரம்-5E, வ/இறம்பைக்குளம் ம.ம.வி.

# இவைக்கு இவை இல்லை

- நண்டுக்கு தலை இல்லை
- யானைக்குத் துதிக்கையில் எலும்பு இல்லை
- சுண்டெலிக்கு வியர்ப்பதில்லை
- கோலா கரடி நீர் அருந்துவதில்லை
- பாம்பின் கண்களில் இமை இல்லை
- யமுனை நதி கடலில் கலப்பதில்லை
- சந்திரனில் வாயு மண்டலம் இல்லை
- தவளைக்கு கழுத்தில்லை.

**கு.சுபோதன்**
இல.78/7, மரக்காரம்பளை வீதி,
நெளுக்குளம், வவுனியா.

# இன்றிலிருந்து அறிந்து கொள்ளுங்கள்

| நூல்கள் | ஆக்கி அளித்த ஆசிரியர்கள் |
|---|---|
| சிலப்பதிகாரம் | ~ இளங்கோவடிகள் |
| பெரியபுராணம் | ~ சேக்கிழார் |
| சீறாப்புராணம் | ~ உமறுப்புலவர் |
| திருவாசகம் | ~ மாணிக்க வாசகர் |
| தேம்பாவணி | ~ வீரமா முனிவர் |
| மகாவம்சம் | ~ மகாநம |
| சத்தியசோதனை | ~ மகாத்மாகாந்தி |
| பாஞ்சாலி சபதம் | ~ சுப்பிரமணிய பாரதியார் |
| நற்சிந்தனை | ~ யோகர் சுவாமிகள் |
| நன்னூல் | ~ பவணந்தி முனிவர் |
| யாழ்நூல் | ~ சுவாமி விபுலானந்தர் |
| நளவெண்பா | ~ புகழேந்தி |
| மணிமேகலை | ~ சீத்தலைச் சாத்தனார் |
| தொல் காப்பியம் | ~ தொல்காப்பியர் |
| திருமந்திரம் | ~ திருமூலர் |
| அரிச்சந்திர புராணம் | ~ நல்லூர் வீரகவிராயர் |

**S.கேனுஜா**
வற்றாப்பளை ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பக்கம் சுற்றும் கோள் - யுரேனஸ்.

# மாணவர் பக்கம்

## உறவுகள் மேம்பட

- தானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.

ம.மெல்வின்
தரம் 09A, வ/தமிழ் மத்திய ம.வி.

"டாக்டர் ஒரு பல்லு பிடுங்கினீங்களே... எத்தனை ரூபா தரணும்"
"இருபத்தைந்து ரூபா"
"இந்தாங்க ஐம்பது ரூபா மீதி தாங்க"
"சில்லறை இல்லையே இருங்க இன்னொரு பல்லையும் பிடுங்கிடுறேன்"



## கவிதையே தெரியுமா?

## பயணம்

உயிர் உடலுடன்
உறவாடும் காலமதில்
உன்னதப் பருவம்
மாணவப் பருவமதில்
இலட்சிய ஊற்றோடு
தமிழர் தேசம் எமதென
தமிழ் எம் தாயென
தமிழை வாழ வைக்க
எம் இனம் தலைநிமிர
உலகதனில் எம் மொழி ஓங்க
உண்மைத் தமிழ் பற்றோடு
எம் மலர்வு தமிழுக்கு
புதுப் பிறப்பென
திசைமாறா சிட்டுக்களாய்
சிறகடித்திடுவோம்......

அஜிதா குணசீலன்
தரம் 11,
வ/கனகராயன்குளம் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுக்கிளிக்கு ஐந்து கண்கள் உள்ளன.

# இந்தியன் ஓயில் கிண்ணம் (Indian oil cup)



இம்முறையும் இலங்கை இந்தியப் பலப்பரீசையில் இலங்கையின் கை ஓங்கியமை ஒன்றும் வியப்பில்லை! இந்திய அணிவீரர்களின் தன்னம்பிக்கையின்மை தொடர்கிறது! கங்குலி துர் அதிஷ்டத்தலைவர் என்றால் ராவிட்டுமா? டொம்மூடி, கிரேக்சப்பல் இருவரில் முதலில் இந்தியா கிறேக்சப்பலையே தமது அணியின் பயிற்சியாளராகத் தெரிவு செய்தது. மூடிக்கு உள்ளூர இந்த வெற்றி ஒரு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். கிரேக்சப்பல் கனவான் பாணியில் நடந்து கொள்ள முற்பட்டது போட்டிகளின் போது தெரிந்தது. இறுதியில் துடுப்பாட்டக்காரர் பக்கம் பழியைச் சுமத்திவிட்டார். உண்மையில் இந்தியாவிடம் தன்னம்பிக்கை, Team Shrite போதாது. இலங்கை அணியினர் தனிப்பட்ட சாதனை படைக்காமல்

## விளையாட்டுப்

இல்லை. எனினும் Tearm Work நீடிக்கிறது. இந்தியாவின் கைப், சேவாக், யுவராஜ்சிங், ராவிட், அசீஸ் நெஹ்ரா போன்றோர் பாராட்டத்தக்கவர்கள்! அணிக்காக ஆடுகிறார்கள்! ஹர்பஜன்சிங் சாதிக்கத்துடிக்கும் நிச்சயமற்ற வீரர்! சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்கள் இந்தியாவிற்கு அவசியம் வேண்டும். இலங்கையில் சனத் ஜெயசூரியா, உப்புல்சந்தன, சமிந்த






யானைகள் அதிகமுள்ள நாடு சிம்பாவே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




வாஸ், திலகரட்ண டில்ஸான், ஹெட்டிகே, ம.ஃரூப் போன்ற சகலதுறை வீரர்கள் எந்த Departmentஇலும் பிரகாசிக்கக் கூடியவர்கள்! சரிவு நிலையில் இருந்த மஹேல ஜெயவர்தன மீண்டும் நிலைக்கு (form) வந்திருப்பது இலங்கைக்கு இனிப்பான செய்தி! இலங்கை அணியின் திறமையைத் திரட்டி இயன்றளவு பயன்படுத்தி வாட்மோர் உலகிண்ணத்தை சுவீகரிக்க வியூகம் வகுத்தார்: டொம் மூடியும்

# பக்கம்

அவ்வாறான திறன் வாய்ந்தவர்! நடந்து முடிந்த போட்டிகளின் போது கையாண்ட யுத்திகள் இதனைப் புலப்படுத்தின! சனத் ஜெயசூர்யாவை அவர் மத்திய தரவரிசைக்கு தொடர்ந்தும் அனுப்புவார் என எதிர்பாத்தோம். வங்காளதேசுடனான ஒருநாள் போட்டியில் புதிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் மத்திய தரவரிசை ஆட்டக்காரர்களை இனங்கண்டுகொள்ளும் பரீட்சையாக அமையும்! இதன் மூலம் இலங்கை அணியின் துடிப்பு நீடிக்கும்! மேற்கிந்திய அணிக்கு வந்த சோதனை இன்று இளம் வீரர்களை அதற்கு அடையாளம் காட்டியுள்ளது. அந்த அணியின் வளர்ச்சி நிதானமாக ஏறுமுகமாக இருப்பது வருங்காலத்தில் எதிரணிக்கு பெரும் தலையிடியாகவே அமையும். நல்ல நிதானமான முன்னேற்றம் அவர்களிடம் உண்டு எதுவானாலும் இலங்கை கிரிக்கற் அணியின் நிர்வாகச் சிக்கல்கள் எதற்குள்ளும் ஆட்படாது வீரர்கள் அசத்தியமை பாராட்டுதற்குரியது! ■



உலகக்கிண்ண கால்பந்துப் போட்டிகள் தொடர் அடுத்த இதழில் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுகட்டும் பாம்பினம் - இராஜநாகம்.

# கட்டிடத் திறப்புவிழா

**18**-07-2005 திங்கட்கிழமை - நேரம் மு.ப 11.00 மணி வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது! ஆசிரியர்களும், மாணவர்களும் பரபரப்போடு சுறுசுறுப்பாக தமது வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். காரணம் கட்டிடத்திறப்புவிழா! ஆம் நிகோட் நிறுவனம் கட்டிக் கொடுத்த வகுப்பறைக் கட்டிடம் ஒன்று அன்று திறந்து வைக்கப்படவிருந்தது!

நாடா வெட்டி மங்களகரமாகக் கட்டிடம் திறக்கப்பட்ட பின்பு அருகிலுள்ள இன்னுமோர் கட்டிடத்தில் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியை ஷகீலா "வருக வருக சிறப்பு மிக்க பெரியோரே" என்று பாடல் மூலமாக அனைவரையும் வரவேற்றார்.

பாடசாலை அதிபர், நிகோட் நிறுவன திட்டப்பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் போன்றோர் உரையாற்றினர். அதிபர் தனது உரையில் "தரம் ஒன்பது வரை வகுப்புக்கள் இருந்தும் போதியளவு கதிரை மேசைகள் இல்லை" என்றார். வலயக் கல்விப்பணிப்பாளர் தனது உரையில் "கல்வி வளர்ச்சிக்கு அனைவரும் பாடுபடவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டதுடன், "நிக்கோட் நிறுவனம் ஒரு ரெக்கோட் (Record) நிறுவனம்" என்று புகழாரம் சூட்டினார்

இறுதியாக உப அதிபரின் நன்றி உரையைத் தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. ●







அயிரம் ஏரிகளின் நாடு எனப்படுவது - சுவீடன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# www.ஆச்சரியம்!.com




இணையன்



▲ **வா**த்து தம்பிகளா எனக்கொரு
ஹெல்ப் பண்றீங்களா?
எங்கயாவது எலிகள் நிக்கிறதைக்
கண்டா உடனே என்னோட
செல்ஃபோனுக்கு கோல் எடுங்க,
நான் உங்களுக்கு சொக்லேட்
வாங்கித் தாரேன்.

**ப**ந்தடிப்போம் பந்தடிப்போம்
பாலா ஓடிவா
பாய்ந்து பாய்ந்து பந்தடிப்போம்
பாலா ஓடிவா
பிளேன் மீது பந்தடிப்போம்
பாலா ஓடிவா ▼





▲ **எ**ன்னங்க டீ இவ்வளவு சூடா இருக்கு
கொஞ்சம் ஆத்தி தரக்கூடாதா?



2004ல் பொருளியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் அமர்டியாசென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலர் ப்ளீஸ்

# Colour Please



## எமது புதிய வாசகர்களே!




கனி 1




கனி 2




கனி 3




கனி 4




கனி 5

பூங்கனியின் புதிய வாசகர்களே! எமது முன்னைய இதழ்கள் உங்கள் கரங்களில் கிட்டவில்லையா? கவலையை விடுங்கள். உங்கள் பெயர், முகவரியைத் தெளிவாக எழுதி, முப்பது ரூபா பெறுமதியான (ஒரு இதழுக்கு) முத்திரையையும் தபால் உறையினுள் வைத்து எந்த இதழ் வேண்டுமென்ற விபரத்தையும் எழுதி அனுப்புங்கள்! பூங்கனி உங்கள் இல்லம் தேடிவரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாவது இந்திய விண்வெளி வீரர் - ராகேஷ் சர்மா

# உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

இங்கே சில வாசகர்கள் தமது எதிர்கால இலட்சியம் பற்றி எழுதியிருக்கிறார்கள். உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன? எழுதி அனுப்புங்களேன்.

முகவரி – அதுதான் உங்களுக்கு நன்கு தெரியுமே!






எனது பெயர் உ.சிவாசினி நான் தரம் 9Aயில் யாழ்/இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்கின்றேன். எனது எதிர்கால இலட்சியம் ஒரு சிறந்த சங்கீத ஆசிரியராக வர வேண்டும் என்பதாகும்.

நான் அவ்வாறு ஆசிரியையாக வந்தால் கலையை வளர்க்க மிகவும் பாடுபடுவேன். எதிர்கால மாணவர்களுக்கு ஒரு சிறந்த துணை ஆசானாக இருப்பேன். அனைத்து விதமான சங்கீத அறிவுகளையும் எடுத்துரைப்பேன். மாணவர்களை கலை ஆர்வம் உள்ளவர்களாக மாற்றுவேன். அவர்களின் திறமைகளை வெளிக் கொணர்வேன். கலைகள் அருகிவரும் நவீனயுகத்தில் மீண்டும் அவற்றை உருவாக்கி நிலைநாட்டுவேன் இச்சங்கீத கலைக்காக என்னையே முற்று முழுதாக அர்ப்பணிப்பேன்.

**உ.சிவாசினி**
மருதனார் மடம்,
யாழ்ப்பாணம்.

எனது பெயர் சிவலிங்கம் ஜெயரூபன். நான் மு/உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் தரம் 5A ல் கல்வி கற்கிறேன். எனது வயது 09 எனது எதிர்கால இலட்சியம் ஆசிரியராக வரவேண்டும் என்பதேயாகும்.

நான் சிறந்த ஆசிரியரானால் பெரியவர்க்கு கீழ்ப்படிந்து சிறப்பாக சேவையாற்றுவேன். அத்தோடு கல்வியில் பின்தங்கிய மாணவர்களை நல்வழிப்படுத்தி கல்வியில் வல்லோராயும் ஒழுக்கத்தில் ஒழுக்க சீலராயும் நாட்டில் நற்பிரஜைகளாகவும் வாழ வழி காட்டுவேன்.

எமது நாட்டில் சிறந்த கல்விமான்கள் உருவாவதற்கு அரும்பாடுபடுவேன்

**"மன்னனுக்கு தன் தேசமல்லால் சிறப்பில்லை கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு"** என்ற பொன்மொழியை நிலைநாட்டுவேன்.

**சி.ஜெயரூபன்,** தரம் - 5A
மு/உடையார்கட்டு ம.வி,

எனது பெயர் பாலசுப்பிரமணியம் பிரியதர்சினி நான் யாழ்/இராமநாதன் கல்லூரியில் தரம் 10A யில் கல்வியை மேற்கொள்கின்றேன். எனது வயது 15. எனது எதிர்கால இலட்சியம் சிறந்த ஒரு வழக்கறிஞராகுதல் ஆகும்.

நான் ஒரு வழக்கறிஞரானால் எனது வாதங்களை பாகுபாடின்றி திறமையாகவும் நேர்த்தியாகவும் செய்வேன். எனது முதல் எண்ணம் என்னவென்றால் அநீதிக்கு எதிராக போராடுவதாகும். என்போன்ற சக வழக்கறிஞரின் அநீதியை நிலைப்படுத்தும் நோக்கத்தினை வேரோடு அழிப்பேன். அதே வேளை எதிர்கால இளஞ் சந்ததியினரை நல்ல அறிவு கூறி வழிப் படுத்துவேன். இதற்காக நான் என்னையே அர்ப்பணிப்பேன்.



**பா.பிரியதர்சினி**
யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளியில் பயணம் செய்த முதலாவது இந்தியப் பெண் - கல்பனா சாவ்லா



# ஏமாற்றாதே

கதை, ஓவியம் :
எஸ்.கௌரீஷன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நலவாழ்வு தினம் - ஏப்ரல் 07.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் நீளமான புகையிரதப்பாதை ரஷ்யாவில் உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக தீயணைப்பு நிறுவனம் லண்டனில் தொடங்கப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயம் அதிகமாக கிடைக்கும் நாடு - அமெரிக்கா.

# மூன்றுவயதில் மகிழ்த்த முத்து!

2000ஆம் ஆண்டில் ஒரு நாள் தமிழ்நாடு கும்பகோணத்தில் தியாகராஜர் உற்சவம் (அந்நியன் படத்தில் பார்த்திருப்பீர்களே!) வெகு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. மாலையில் இசைக்கச்சேரி! பிரபல மிருதங்க வித்துவான்களான பூங்குளம் சுப்பிரமணியம், நாச்சியார் கோவில் ரகு, கும்பகோணம் சுவாமிநாதன், மற்றும் புல்லாங்குழல் வித்துவான் T.R நவநீதம், வீணை வித்துவான் மாலதி கிருஷ்ணமணி போன்ற பல பிரபல கலைஞர்கள் மேடையில் அமர்ந்திருக்க மேடைக்கு ஒரு குழந்தை அழைத்துவரப்படுகிறது!

பார்வையாளர்கள் மத்தியில் சல சலப்பு!, முணுமுணுப்பு! "என்ன இது தியாகராஜர் உற்சவத்தில் ஒரு குழந்தை பாடப்போகிறதா?" என்ற சந்தேகம் பலருக்குத் தோன்ற குழந்தைபாட ஆரம்பித்தது. முணுமுணுத்தவர்கள் வாயடைத்துப் போனார்கள் மேடையிலிருந்த வித்துவான்கள் வியந்து போனார்கள் அக்கணத்தில் குழந்தை பாடிய விதத்தை வர்ணிக்க எம்மிடம் வார்த்தைகள் இல்லை.



யார் இந்தக் குழந்தை? கள்ளங்கபடமேதுமின்றி, இம்மாத பூங்கனியின் அட்டையில் புன்னகை புரிகிறதே ஒரு பிஞ்சு அது தான் குழந்தை!

பெயர்:- யது நந்தினி யாழ்ப்பாணம் இணுவில் இந்துக் கல்லூரியின் தரம்-3 மாணவி!



மேலதிக தகவல்களுக்கு முன்பு மீண்டும் கும்பகோணம் போய்வரலாம்!

குழந்தை பாடி முடிக்கிறது மெய் சிலிர்த்துப்போய் சிலையாகி நின்றவர்கள் மேடைக்கு ஓடி வருகிறார்கள். காணிக்கைகளை அள்ளி வழங்குகிறார்கள்! வித்துவான்கள் பாராட்டுமழையில் குழந்தையை நனைக்கிறார்கள்! தியாகராஜர் படத்திலிருந்த மாலையை எடுத்து குழந்தைக்கு அணிவிக்கிறார்கள்! அனைவரது முகத்திலும் மகிழ்ச்சி! பெற்றோரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

குழந்தை யதுநந்தினி1997-12-28ல் பிறந்தார் சங்கீத வித்துவான் இராமநாதன் வசந்தி தம்பதிகளின் மூன்றாவது மகள் தந்தை இராமநாதன் யாழ் பல்கலைக்கழகத்தில் 15 வருடங்களுக்கு மேலாக இசை விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார். தனது மகளின் திறமை தனக்குத்தெரியவந்த விதம்பற்றி திரு இராமநாதன் இவ்வாறு விபரிக்கிறார்.

"ஒருநாள் அன்னமச்சாரியாரின் கீர்த்தனை ஒன்றுக்கு இசைக்குறிப்பு (Notation)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவிநடுக்கத்தை அளக்கும் கருவி சீஸ்மோகிராப்.

எழுதுவதற்காக அப்பாடலைத் திரும்ப திரும்ப கேட்டுக்கொண்டிருந்தேன். அப்போது யதுநந்தினி "அப்பா இப்பாடலுக்கு நான் நொட்டேசன் கூறுகிறேன்" என்று கூறி மள மளவென்று கூற ஆரம்பித்தாள் என்னால் நம்பவே முடியாதிருந்தது. காரணம் அப்போது அவளின் வயது மூன்று!"

அன்றிலிருந்து பல இசைக் கச்சேரிகளை செய்ய ஆரம்பித்தார் யது.

திருவையாறு தமிழிசைவிழா, நவராத்திரி விழாக்கள் போன்றவற்றில் பாடி தமிழகத்தில் முத்திரை பதித்த இக்குழந்தை 2004ல் தாயகம் திரும்பியது

இங்கு யாழ்ப்பாணத்திலும் பல இசைக் கச்சேரிகளைச் செய்து வருகிறார். இவரது திறமையை



வளர்க்க யாழ் இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ப.சச்சிதானந்தம் அவர்கள் பெரும் பக்கபலமாக இருப்பதோடு, பல வாய்ப்புக்களையும் யதுநந்தினிக்கு ஏற்படுத்தி வருகிறார். "அவருக்கு எமது நன்றிகள்" என்கின்றனர் யதுநந்தினியின் பெற்றோர்.

"எத்தனையோ இடங்களில் கச்சேரி நடத்தினாலும் இந்தியாவின்





ஒரேயொரு சரஸ்வதி கோவிலான கூத்தனூர் சரஸ்வதி கோவிலில் கச்சேரி செய்தமை மறக்க முடியாது" என்று தன் மழலைக் குரலில் கூறிய யது "மீண்டும் இந்தியா சென்று இசைத்துறையில் மேலும் மேலும் கற்க வேண்டும்" என்கிறார்.

குழந்தை யதுநந்தினியை மனதார வாழ்த்துவோம்! இவளின் இசைப் பயணம் மேலும் வளர்வதாக!!



பச்சைக்கிளியே வா வா வா!
பழமும் கனியும் தின்ன வா!!
விளையாடியும் மகிழ வா!
பயற்றம் பருப்பும் தின்ன வா!!
கூண்டில் அடைக்கவும்
மாட்டேன் நான்!
கஸ்டப்படுத்தவும் மாட்டேன் நான்!!
சுதந்திரமாய்ப் பறக்க விடுவேன்!
கொஞ்சி விளையாடுவேன்!!

ச.சிந்துர்க்கா
தரம் 5E
வ/இறம்பைக்குளம்.ம.ம.வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
தேசியக் கொடி இல்லாத நாடு - மசிடோனியா.

# முடி உதிர்வதைத் தடுப்பது எப்படி?

## டொக்டர் ஸ்பீக்கிங்



**இ**ப்போதெல்லாம் இளையவர்களுக்கு முடி உதிர்வது சாதாரணமாகிவிட்டது. இதனைத் தவிர்ப்பது எப்படி? எமது நாடு மிகவும் வறண்ட பிரதேசமாகும். இன்றைய இளையவர்கள் தலைக்கு எண்ணை வைப்பது குறைவு. நன்கு எண்ணை வைக்க வேண்டும்!

பண்டைய காலத்தில் செவ்வரத்தம் பூ மதுரம்துளிர், தேசிக்காய், குளத்துக்களிமண்,பழம் பாசி வைத்து முழுகுவது வழக்கம்.

இன்று இரசாயன சேர்வைகளான சம்போ, கிறீம் வகைகள் பாவிப்பதும், தொடர்ந்து தலைக்கவசம் (helmet) அணிவதும், தொப்பி போடுவதும் இயற்கையான நல்ல சத்தான உணவு இல்லாமையுமே முடி உதிரக் காரணங்களாகும்.

முடி உதிர்வதைத் தடுக்க நல்ல கீரைவகைகள், பழவகைகள் உண்ண வேண்டும். இயற்கையான தலை கழுவும் சாதனங்களைப் பாவிக்க வேண்டும்.

நிறமூட்டிகளைத் தவிர்ப்பது நல்லது.

தலைக்கு குளிர்ச்சியான நல்லெண்ணை, ஆமணக்கெண்ணை, தேங்காயெண்ணை பாவிக்கலாம்.முடி உதிர்பவர்கள் பொன்னாங்காணி எண்ணை மற்றும் குளிர்ச்சியான எண்ணைகளைப் பாவித்தால் முடி உதிர்வதைத் தடுக்கலாம். ●

வைத்தியர்
ப.சத்தியநாதன்



### ஆக்கங்களை அனுப்பும்போது....

- **தா**ளின் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதுங்கள்.
- **தெ**ளிவான கையெழுத்தில் உங்கள் ஆக்கங்கள் அமையட்டும்.
- **ஓ**வியங்கள் அனுப்புவதாயின் கறுப்புநிறப் பேனாவால் அல்லது பென்சிலால் வரைந்து அனுப்புங்கள் வர்ண ஓவியங்கள் இப்போதைக்கு வேண்டாமே பிளீஸ்!
- **உ**ங்கள் பெயர், முகவரி போன்றவற்றை தெளிவாக கடித உறையிலும் ஆக்கம் எழுதும் தாளிலும் எழுத வேண்டும்.
- **பொ**து அறிவுத் தகவல்கள், மருத்துவக் குறிப்புகள் போன்றவற்றை அனுப்பும்போது அவற்றை எங்கிருந்து பிரதி செய்தீர்கள் என்பதை தவறாமல் குறிப்பிட்டு அனுப்புங்கள்.


விளம்பரங்கள் மற்றும் ஏனைய தொடர்புகளுக்கு

**பூங்கனி**

இல. 141, திருநாவற்குளம்,
வவுனியா.

0777 446914
077 6674609




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகப்பெரிய பாடசாலை நியூயோர்க் நகரில் உள்ளது.

கொழும்பு ஸ்ரீரஞ்சனி புத்தகசாலையினரின் அனுசரணையுடன்

# ஸ்ரார் பப்ளிகேசன் வெளியீடுகள்

## பரீட்சை வழிகாட்டிகள்

- தரம் 1, 2, 3. 4, 5 வகுப்புகளுக்கான அனைத்துப் பாடங்களும் தழுவிய மாதிரி வினாத்தாள்கள் அடங்கியது. (வகுப்பறைச் செயற்பாட்டிற்கும், வீட்டில் சுயமாகக் கற்பதற்கும் உகந்தது.
- 7, 8, 9, 10, 11 பரீட்சை வழிகாட்டிகள் (விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்) ஆசிரியர் : இ.நிர்மலன்
- மாதாந்த பரீட்சை வினாத்தாள்கள் (தரம் **1 - O/L** வரை)
- சுறுக்கக் குறிப்புகளும், மாதிரி வினாத்தாள்களும், விடைகளும்.

## தொடர்புகட்கு

*SRI RANJANI BOOK SHOP*

190A, Jampettah Street, Colombo - 13.

T.P : 0777 413990

---

**Computer Designing**

**Multi Colour Offset Printing**




**61-B,**
**1st Cross Street,**
**Vavuniya.**
**024 2223658**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




The Poonkani, A monthly magazine for children was printed at Vaani Computer Printing Centre, 6 5, 1st Cross Street, Vavuniya on behave of Kaatru Publication, on 1st September 2005.